தென்மொழி

சுவடி : 15.
ஓலை : 9.

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

விலை:
1. உருபா.

நமக்கு வந்த மடல்கள்.

0:639: அன்புள்ள அய்யா! வணக்கம்! திரு. மகாலிங்கம் அவர்கள் ஏற்பாடு செய்திருந்த கருத்தரங்கைப் பற்றித் "தென்மொழி"யில் எடுத்துக்காட்டிய விருப்பு வெறுப்பற்ற தங்கள் உண்மை விளக்க மதிப்பீடு மிகப் பாராட்டுதற்குரியது. தந்தை பெரியார் அவர்கள் சில நேரங்களில் எடுத்துக்காட்டியது போல தமிழனுடையத் தாழ்வுக்குத் தமிழன் தான் காரணமேயன்றி மற்றவர்கள் அல்லர். அண்மைக் கால வரலாறு தான்அவ்வகை நிலையைக் காட்டியது என்றால், இக்கால நடைமுறைகள் பலகோணங்களில் அவ்வகை நிலையை வலியுறுத்தி வருகின்றன. திரு.மகாலிங்கம் அவர்கள் வள்ளலாரின் சன்மார்க்க சங்கத் தலைவர் எனச் சொல்லுகிறார்கள். வள்ளலாரின் மதமற்ற சாதியற்ற மாந்த நேயச் சமநிலைக் கொள்கைகளுக்கும், இந்துமதப் புராணக்கருத்துகளுக்கும் எவ்வகைப் பொருத்தமும் இல்லையென்பதோடுகூட முற்றிலும் முரண்பாடு உள்ளதாகும். புராண இதிகாசக் கதைகள் கருத்துகள் வள்ளலாரின் சொற்களில் சொல்லவேண்டுமானால் ஒரு பிள்ளை விளையாட்டு. திரு. மகாலிங்கம் அவர்கள் ஏற்பாடு செய்த கருத்தரங்கு சிறு பிள்ளை விளையாட்டு மாத்திரமன்று; ஓர் ஏமாற்றுச் செயலாகும். ஒரு முடிவுக்கு வந்தவர்கள், சில கட்டுக்கதைகளிலிருந்து சில அடிப்படைகளைத் தேடியிருக்கிறார்கள். திரு. மகாலிங்கம் அவர்கள் உண்மையிலேயே உண்மை தெரிய வேண்டுமென்னும் முயற்சியில் ஈடுபட்டிருந்தால் மாற்றுக் கருத்துடையவர்களையும் அழைத்து, கருத்தரங்கில் கலந்து கொள்ளும்படி செய்து, இருதரப்புக் கருத்துகளையும் கேட்டு அறிவாளிகள், நடுநிலையுள்ளவர்கள் ஒரு முடிவுக்கு வரத்தக்க ஒரு வாய்ப்பினை ஏற்பாடு செய்திருக்க வேண்டும். அவ்வகை முயற்சியில் திரு. மகாலிங்கம் ஈடுபட்டிருக்க மாட்டார்; ஏனென்றால் உண்மை கசப்பானது; உண்மையைக் கண்டு அச்சப்படும் பெருங்கூட்டத்தின் தலைவர். திரு.மகாலிங்கம். திரு.மகாலிங்கம் கும்பலின் உண்மை நிலையை எடுத்துக் காட்டிய தங்களுக்கு என்னுடைய நன்றி; தமிழகத்தின் நன்றி.

—**இரா. கசுத்தூரி.** வழக்கறிஞர். கோவை-2.

0:640: அன்பிற்குரியீர், வணக்கம். நலம். 'தென்மொழி' (பெப்ருவரி—மார்ச் 79) இதழின் ஆசிரிய உரை படித்து நானும் உளம் கவன்றேன். நமது மகாலிங்கம் போன்றவர்கள் ஆரியத்துக்கு அடிபணிவது புதுமை அன்று; தமிழ் வரலாற்றில் இப்படிப்பட்டவர்கள் பலபேர் உண்டு. எனவே, அவருடைய நிழலில் ஆரியக் காளான்கள் குடை விரித்தது கண்டு நான் வியப்படையவில்லை.

—**பர் சாலை இளந்திரையன்**. புதுத்தில்லி-21

0:641: பொழில்வாய்ச்சி (பொள்ளாச்சி) வள்ளல் எழிலுறக் கூட்டிய தொன்மவியல், வானியல் கருத்தரங்கம் ஓர் இன அழிவு முயற்சி மட்டுமன்றி ஆரிய நச்சுயிரிகளுக்கு ஆக்கந்தரும் முயற்சியுமாகும். பெருஞ்செல்வர் சில்லோர் பெயரும் புகழும் பெற்று, மேன்

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம் பார்க்க)

கெஞ்சுவதில்லை பிறர்பால்!
அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும்
நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை'' எனவே
தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில்
எவரும் எதிர்நின்றே!

சுவடி: 15 ஓலை. 9.
[நிறுவனம் தி. பி. 1990 (1959)]
மீனம் தி. பி. உயகய-
மார்ச்சு-ஏப்பிரல்-1979.

தென்மொழி
இலக்கிய இதழ்

பொறுப்பாசிரியர்: **பெருஞ்சித்திரனார்.**
ஆசிரியர்: **மா. பூங்குன்றன்.** அறி.இ; க.மு.
புரப்பாசிரியர்கள்
தென்மொழி முல்லைவாணன் (சிங்கை)
தென்மொழி மறை. நித்தலின்பனார் (தமிழ்நாடு)
கலைக்கோயில் மாணிக்கம் (சிங்கை)
தென்மொழி. ந. முத்துக்குமரன் (தமிழ்நாடு)
தென்மொழி மின் அச்சகம், சென்னை-5, தமிழகம்,
[பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும், பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன']

அமிர்தலிங்கத்தின் தமிழக வருகையும் அதன் பயன்களும்!



அண்மையில், இலங்கைப் பாராளுமன்ற எதிர்க்கட்சித்தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளரும் ஆகிய திரு. **அ. அமிர்தலிங்கம்** அவர்களும், அவர்களின் துணைவியார் திருவாட்டி **மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம்** அவர்களும் இந்தியாவிற்கு வந்து, தில்லியில் தலைமை அமைச்சர், வெளிநாட்டுத் தொடர்புத் துறையமைச்சர் முதலியோரைக் கண்டு பேசியதுடனல்லாமல், தமிழகத்தில் முன்னும் பின்னும் பத்து நாட்களுக்கு மேலாகத் தங்கியிருந்து, ஆங்காங்குப் பரவலாகப் பல வரவேற்புக் கூட்டங்களிலும் பாராட்டுக் கூட்டங்களிலும் கலந்து கொண்டு, தமிழீழத்தைப் பற்றியும், அங்குள்ள தமிழர்களைப் பற்றியும் பலவகையான கருத்து விளக்கங்களையும், வரலாற்று, நடைமுறை நிலைகளையும் இங்குள்ள தமிழக மக்களுக்கு உணர்வு பெற எடுத்து விளக்கிய நிறைவுடன் தம் நாடு திரும்பியுள்ளனர். அவர்களின் இந்தப் பதினைந்து நாளையச்

செலவு அவர்களுக்கும், தமிழீழ மக்கட்கும், சிறப்பாகத் தமிழினத் திற்குமே கிடைத்த பெரும் பயனும் வெற்றியும் ஆகும் என்பது மிகைப்பட்ட கூற்ருக இருத்தல் முடியாது.

அவர்கள் சென்ற இடங்களிலெல்லாம் தமிழர்கள் பெருந்திரளாக இலக்கக் கணக்கில் கூடியிருந்து, ஊர்வலம் நடத்தி அவர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்று மகிழ்ந்ததும், சில நகரங்களில் நள்ளிரவு வரையிலும் காத்திருந்து, அவர்களின் உணர்வும் உண்மையும் மிக்க சொற்களால் தமிழீழ வரலாற்று நிகழ்ச்சிகளையும் அண்மையில் ஏற்பட்ட இன அழிப்புக் கொடுமைகளையும் நேரிடையாகக் கேட்டு உள்ளம் வெதும்பியதும் உருக்கமான குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி களாகும். இதுநாள் வரை இங்குள்ள செய்தித் தாள்களும் கிழமை மாத இதழ்களும், மிக அண்மையில் உள்ள ஈழத் தமிழர்களைப் பற்றியோ அவர்களுக்கு நேர்ந்த—நேர்ந்துவரும் இனக்கொடுமை களைப் பற்றியோ, ஓரளவும் விளக்கிக்கூருத நிலையில், அமிர்தலிங்கம்-மங்கையர்க்கரசி அவர்களின் உண்மை மிகுந்த உள்ளுணர்வுப் பொழிவுகள், இங்குள்ள மக்களுக்குத் தமிழீழத்தின் எல்லாவகை நிலை களையும் மிகத் தெளிவாக விளக்கின; உள்ளுணர்வு மூட்டின; உணர்வுக்கனல் எழுப்பின. தம் அண்டை அயல் நாடுகளில் வாழும் தமிழின மக்கள் ஆங்காங்குள்ள சூழல்களுக்குத் தக்கவாறு, தங்களை விட மிகச் செழிப்பாகவும் வளப்பமாகவும் வாழ்ந்து கொண்டிருக் கின்ருர்கள் என்றும், தாங்கள்தாம் வறுமை மிக்கவர்களாக, உரிமை யிருந்தும் ஊமைகளாக வாழ்ந்து கொண்டிருக்கின்றேம் என்றும், தவருகக் கணக்கிட்டு வந்த தமிழ் மக்களுக்கு, அமிர்தலிங்கம்-மங்கையர்க்கரசி ஆகியோரின் வரவு பெருத்த விழிப்புணர்ச்சியை-இனக்கவலையை உண்டாக்கித் தந்தது என்று சொன்னுல் மிகை யாகாது. இங்குள்ள உள்நாட்டின் போலியும் புகைச்சலும் புரைசலும் நிரம்பிய அரசியல் நடவடிக்கைகளினுல் வறண்டும் வெதும்பியும் கிடந்த தமிழ் மக்களுக்கு, தமிழினத்தலைவர் அவர்களின் வரவும் பேசிய பேச்சுகளும் உணர்வு முனைகளின் மேல் பொழிந்த அமிழ்த மழையாகவே இருந்தன என்று சொன்னுல் அதுவும் மிகையாகாது. மொத்தத்தில் உலகத் தமிழர்களின் அவலம் நிறைந்த நாடோடி வாழ்க்கை உணர்த்தப்பட்டது. அவர்கள் தங்களுக்கென்று ஒரு தனி நிலத்தை, நாட்டை விரைந்து அமைத்துக்கொள்ள வேண்டும் என்பது உடனடியாகவும் உறுதியாகவும் செய்யத்தக்கதாகும் என்றும் இங்குள்ள மக்களை உணரச் செய்தது, அவர்கள் வரவு.

திரு. அமிர்தலிங்கம் அவர்கள் இவ் விந்தியச் செலவுக்குச் சில மாதங்களுக்கு முன், சிற்சில மேலை கீழை நாடுகளுக்குச் சென்று வந்ததும் இங்குக் குறிப்பிடத்தக்கது. அப்பொழுதும் அவர்கள் தம் கட்சிக் கொள்கைகளுக்குப் பரவலான ஆதரவையும் இலங்கைத் தமிழர்மேல் உடனடியான ஓர் இரக்கத்தையும் திரட்டி வந்ததும் ஒரு நல்ல விளைவே ஆகும்.

ஆனால், தமிழினச் சார்பில், உலகில் எந்த மூலையில் எத்தகைய இன முன்னேற்ற முயற்சிகள் நடந்தாலும், இங்கு நம் தமிழகத்தில் முகஞ்சுழிக்கப் பார்த்து வாய் புளிக்கப் பேசும் சிலர் எப்போதுமே உண்டு. அவற்றைப் பாராமுகமாக விட்டு விடும் சில 'பெரியது' களும் உண்டு. மொத்தத்தில் தமிழகம் ஒரு குழப்பப்பட்ட குட்டையாக இருந்து கொண்டு, பல இனத்தவர்களும், பல கட்சியைச் சேர்ந்தவர்களும், பல நோக்கத்தவர்களும், பல புனைவுகளில் இங்கு வந்து வாணிகம் நடத்துபவர்களும் பயன்படுத்திக் கொள்ளும் ஒரு பொதுச் சந்தையாகவே விளங்கி வருகிறது. இந்நிலையில் திரு. அமிர்தலிங்கம் போலும் உண்மைத் தமிழினத் தலைவர்களின் பேச்சு இங்குள்ள சிலர்க்கு உண்மையான மகிழ்ச்சியை விளைவித்திருக்க முடியாது. மாறாகக் கசப்பையும் வெறுப்பையுமே உண்டாக்கியிருக்க முடியும். அத்தகைய கசப்பையும் வெறுப்பையும் கொட்டி, திரு. அமிர்தலிங்கம் அவர்களின் பேச்சுகளையும் அவர் வெளிப்படையாகக் கூறிய கருத்துகளையும் செரித்துக் கொள்ளவும், பொறுத்துக் கொள்ளவும் முடியாமல், **'இந்து'** ஆங்கில நாளிதழ் மார்ச்சு **26**-இல் ஓர் ஆசிரியவுரை எழுதியிருந்தது. இதற்கு முன்னும் இத்தகைய ஆசிரியவுரைகளை அவ்விதழ் எழுதித் தன் வயிற்றெரிச்சலைக் கொட்டித் தீர்த்திருக்கின்றது. அவ்வுரைகள் எல்லாம் திரு. செயவர்த்தன அவர்களின் அரசால் சிறுசிறு வெளியீடுகளாக அச்சிடப்பெற்று இலங்கையில் வழங்கப் பெற்றிருக்கின்றன.

பொதுவாக **இந்து** போலும் நாளிதழ்கள் செயவர்த்தன அரசுக்கு ஆதரவு தருவதில் வியப்பில்லை. அவற்றின் உள் நோக்கம் உலகின் எந்த மூலையிலும் தமிழர்கள் தங்களுக்கென ஒரு தனித்தமிழ் நாட்டை அமைத்துவிடக் கூடாது என்பது தான். அவ்வாறு ஒரு நாடு அமையுமானால், உலகத் தமிழினம் அதனடிப்படையில் மிகவும் வலுப்பெற்ற ஓரினமாக உருப்பெற்றுவிடும் என்பது அவற்றின் அச்சமாகவும் இருக்கலாம். இப்பொழுதுள்ள நிலையில் இலங்கையில் வாழும் தமிழர்களிடையில்தான் இத்தகைய தனித்தமிழ்நாட்டு அமைப்புக்குச் சார்பான சில சூழ்நிலைகள் உருவாகி வருகின்றன. அங்குள்ள தலைவர்களும் அவர்களைப் பின்பற்றும் உண்மையான தொண்டர்களுந்தாம் தனித்தமிழீழ நாட்டு அமைப்புக்காகத் தங்களை ஒப்படைத்துக் கொண்டுள்ளனர். இவர்களுக்குச் சார்பான அல்லது துணையான சூழ்நிலை, உலகம் முழுதும் இத்தகையவர்கள் விரும்பியோ விரும்பாமலோ உருவாகி வருவது இவர்கள் நெஞ்செரிச்சலை இன்னும் மிகுதிப்படுத்துவதாக இருக்கிறது. எனவேதான் **இந்து** நாளிதழ் தமிழினத் தலைவர் திரு. அமிர்தலிங்கத்தின் நடவடிக்கைகளை **குறும்புத்தனமானவை (Mischievous)** என்றும், அவர்களின் வெளிப்படையான பேச்சுகளை **'குறைகூறுகிற'** பேச்சுகள் **(Cynical Statements)** என்றும் கண்டித்திருக்கின்றது.

குறைகள் இருந்தால் அவற்றை எடுத்துக் கூறுவது குறும்புத்தனமானது ஆகாது. மூடிமறைப்பதுதான் நாணயமற்றதும்

திருட்டுத் தனமானதுமாகும். அதுவுமன்றித் தமிழீழக் கோரிக்கையையே தவறானதும், வீணானதுமான முயற்சி என்று கருத்துரைத்திருக்கின்றது. ஏனெனில் அக்கோரிக்கை குமுகவியல், பொருளியல், அரசியல் அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்படாத, சரியென்று ஒப்புக் கொள்ளப்படாத கொள்கை என்று அது கூறியுள்ளது. (**The real point is that the demand for the break-up of Sri Lanka through the formation of 'Eelam' is as mischievous as it is socially, economically and politically untenable. The Hindu. Mar. 26,'79**).

மேலும் அது, திரு. அமிர்தலிங்கம்-அவர்கள் விருந்தினராக வந்தவிடத்தில், இதுபோலும் கருத்துகளைப் பேசி, இந்திய-இலங்கைத் தொடர்பையே பாழாக்கும் வகையில் நடந்து கொண்டார் என்று குற்றம் சாட்டி, இது மிகவும் கண்டிக்கத்தக்கது என்றும் எழுதியிருக்கின்றது.

இந்து ஆங்கில இதழ் உலகின் பெரும்பாலான நாடுகளில் பரவலாகப் படிக்கப்பெறும் ஓர் இந்திய இதழ். அதன் தன்மை என்ன, கொள்கை எது என்பது பற்றித் தமிழினம் நன்கு அறிந்தே இருக்கிறது. அவ்விதழ் இந்நேரத்தில் இத்தகைய ஆசிரியவுரை ஒன்று எழுதி, அதன்வழி திரு. அமிர்தலிங்கத்திற்கும் அவரின், தமிழீழக் கொள்கைக்கும் தமிழ்நாட்டிலும் தமிழர்களிடையிலும் ஆதரவு இல்லை என்பது போல் உலகின் கண்களுக்குக் காட்ட வேண்டும் என்றும் விரும்பியிருக்கின்றது. வெளிநாட்டவர்க்கு **இந்து**வின் கருத்து தமிழர்களின் கருத்தில்லை என்பது அவ்வளவாகத் தெரியாது. தெரிவதற்கும் வாய்ப்பில்லை. ஏனெனில் இங்குள்ள உள்ளூர் அரசியல்காரர்கள் தங்கள் தங்கள் கட்சியைப் பற்றிய செய்திகளைப் பற்றியும் தங்களைப் பற்றியுமே இங்குள்ள தமிழர்களிடையில் தம்பட்டம் அடித்துக் கொண்டிருப்பதும், அவர்களை ஏமாற்றித் தங்கள் வாழ்க்கையை நடத்திக் கொள்வதும், அதுமட்டில் அதற்கு ஊறுவராமல் காத்துக் கொள்வதுமே போதும் என்று நினைப்பவர்கள். எனவே, உலகத்தமிழர் அனைவரையும் அளாவிக் கொள்ளும் வகையில், **இந்து** போலும் ஓர் ஆங்கில நாளிதழ் நடத்துவது அவர்களுக்குத் தேவையில்லாததாக இருக்கிறது. அவர்களுக்கு உலகத் தமிழினத்தைப்பற்றி எந்தக் கவலையும் இல்லை. அப்படிக் கவலைப்பட்டால் தாங்கள் உயிர் வாழ முடியாது என்று அப்பட்டமாக நினைப்பவர்கள். ஆனால் அவர்கள் பேச்சிலும் எழுத்திலும் மட்டும் உலகத் தமிழர்களைப் பற்றிய அக்கறை கொஞ்சும்; அன்புரை விஞ்சும்! அத்தகை இழிநிலை இங்கு. இந்நிலையில் இந்து போலும் நாளிதழ்கள் தாங்கள் எண்ணுவதை உடனே எழுதி எளிதாக உலக முழுவதும் பரப்ப முடிகிறது. தமிழர்களுக்கு மாறான கருத்தை விரைவில் உலக அரங்கில் உருவாக்க முடிகிறது. எனவே இந்துவில் கருத்துரைகள் வந்தவுடன் அவற்றின் எதிரொலிகளாகச் சில நடவடிக்கைகளை நம்மால் பார்க்க முடிகிறது.

இந்து ஆசிரியவுரை வந்த ஓரிரு நாட்களுக்குப்பின், இலங்கை வணிகத்துறை அமைச்சர் திரு. **இலலித் அதுலத்முதலி** என்பார் செய்தியாளர்களிடையே, தமிழகத்தில் திரு. அமிர்தலிங்கம் பேசிய பேச்சுகளின் அடிப்படையில் பலவகையான எதிர்நிலைக் கருத்துகளை வெளிப்படுத்தியுள்ளார். அவர் பேச்சில் இந்துவின் உணர்வும் கொள்கையும் கலந்து வெளிப்பட்டிருக்கின்றன. அவர் கூறிய கருத்துகளில் ஓரிரண்டு கவனிக்கத் தக்கன.

"பிரிவினைக் கருத்தைக் கைவிடாமல் எந்த இணக்கமான பேச்சுக்கும் இடமில்லை; எனவே தமிழர் விடுதலைக் கூட்டணி கேட்கும் வட்டமிசை மாநாட்டிற்கு அரசு இசையவில்லை என்று அமிர்தலிங்கம் (தமிழ் நாட்டுக் கூட்டங்களில்) பேசி வருவது உண்மையில்லை, தன் ஆளுமையை உறுதிப் படுத்திக் கொள்வதைத் தன் விருப்பமாக விடுமாறு முன்னணி கோருகிறது. குடியேற்ற நாடுகள் ஆட்சிக் காலத்தில்தான் (Colonial Times) இந்தக் கோரிக்கை பொருந்தும். தன்னுரிமை ஆட்சி நாடுகளுக்குப் (Independent countries) பொருந்தாது" என்பவை அவர் கருத்துகளில் சில. இன்னும் அதே நாளில் அங்கு நடந்த ஒரு கல்லூரிப் பேச்சில், அந்த அமைச்சரே, "திரு. அமிர்தலிங்கம் 35 இலக்கம் தமிழர்களும் தனிநாடு அமைக்க விரும்புவது போல் பேசி வருகிறார். அதில் தொண்டமானைத் தலைவராகக் கொண்ட 14 இலக்கம் பேர் தமிழீழத்தை விரும்பவில்லை. எனவே அமிர்தலிங்கம் சொல்வது மிகைப்படுத்திக் கூறுவதாகும்" என்றும் கூறியிருக்கிறார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியும் தலைவர் அமிர்தலிங்கமும் இன்றைக்கு மட்டும் ஏதோ திடுமென நினைத்துக் கொண்டு புதிதாக ஒரு தனிநாட்டைக் கோரவில்லை. தொன்றுதொட்டு ஏற்கனவே இருந்த தமிழீழத்தைத்தான் கேட்கிறார்கள். அக்கோரிக்கையும் பழமையானதே. இனி, அக்கோரிக்கைக்கு வரலாற்றுப் பின்னணியும் உண்டு. ஏதோ சில வரலாற்றுத் தவறுகளால், சிங்களமும் தமிழீழமும் ஒரு நாடாக மாற்றப்பட்டு, அதே வரலாற்றுத் தவறாக, வெள்ளையர்களால் இரண்டு நாடுகளையும் சிங்களவரிடம் ஒப்படைக்கப் பட்ட நிலையில் தங்கள் உரிமை சான்ற பழந்தமிழீழத்தையே இலங்கைத் தமிழர், தம் இறைமையை தாங்களே உறுதிப் படுத்திக் கொள்ளக் கோரி வருகின்றனர். பேராசையாலோ அறியாமையாலோ ஏதோ இன்னொருவருக்குச் சொந்தமான அல்லது சிங்களவர்க்கே சொந்தமான நாட்டில் தமிழர் பங்கு கேட்கவில்லை.

இப்பொழுதுள்ள சிங்களவர்கள் தமிழர்களுக்குத் தருகின்ற—தர விரும்புகின்ற மொழி, இன நல, ஆளுமை உரிமைகள் எந்த அளவில் இருக்கும் என்பது, கடந்த கால ஐந்தாறு தமிழ் இன அழிப்புக் கொடுமைகளால் தெளிவாக மெய்ப்பிக்கப்பட்டு விட்டது. எனவே அங்குள்ள தமிழர்கள் இனியும் தங்கள் அரசியல் உரிமைகளைத் தாங்களே உறுதிப் படுத்திக் கொள்ள முயல்வதில் தவறே இல்லை.

மேலும் **இந்து**வும் அதன் கருத்தை அப்படியே உட்கொண்ட நம் தமிழக முதலமைச்சர் திரு. ம. கோ. இரா. அவர்களும், அயல் நாட்டில் விருந்தினராக வந்தவிடத்தில் திரு. அமிர்தலிங்கம் இவ்வாறு பேசியது, இருநாடுகளுக்கும் இடையில் உள்ள இணக்கமான நட்பை ஊறுபடுத்துவதாக அமையும் என்று கூறியுள்ளனர். முதலமைச்சர் அதற்கு மேலும் ஒரு படி சென்று, திரு. அமிர்தலிங்கம் இப்படிப்பட்ட பேச்சுகளால்தாம் இந்துவை இப்படியோர் ஆசிரியவுரை எழுதும்படி தூண்டியிருக்கிறார் என்றும் கூறியிருக்கிறார். அத்துடன், அவர், திரு. அமிர்தலிங்கம் தமிழக அரசின் விருந்தினராக வந்துள்ள பொழுது மதுரையில், அரசு இயங்கியில் ஏறாமல் ஓர் அரசியல் கட்சி கொண்டு வந்த இயங்கியில் ஏறியதையும் வருத்தத்துடன் குறிப்பிட்டுள்ளார். (இந்து 30.3.79).

முதலமைச்சர் திரு. இராமச்சந்திரன் அவர்கள் இந்துவின் கருத்துரை சரியே என்று சான்று கூறியிருப்பதும், திரு. அமிர்தலிங்கம் அவர்களை மற்ற கட்சியினர் வெகுவாக வரவேற்றுப் பாராட்டிய எரிச்சலில் அவர் மேல் தி.மு.க. வண்டியில் ஏறிப்போனார் என்று குற்றம் சாட்டியிருப்பதும் வருந்தத் தகுந்தனவாகும்.

திரு. அமிர்தலிங்கம் வெளிநாட்டில் விருந்தினராக வந்தவிடத்தில் தம் உள்நாட்டுச் செய்திகளைப் பேசியது தவறு என்றால், இரண்டு மூன்று மாதங்களுக்கு முன், திரு. செயவர்த்தனே இங்கு வந்து தம் நாட்டு அரசியல் நிலைமைகளைக் கூறியதும் பெருந் தவறாகும். அவர் இங்கு மூடி மறைத்தும் திரித்தும், தம் ஆட்சியில் தமிழர்களுக்குத் தவறே நேராதது போல் பேசிய உள்நாட்டு அரசியல் நடவடிக்கைகளையே, திரு. அமிர்தலிங்கம் வெளிப்படையாக, உண்மையாகப் பேசி இங்குள்ள தமிழர்களுக்கு விளக்கினார். உலக நாடுகளில், காலச் சூழலால்-கொடுமையால் சிதைந்து வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழினத்தின் ஒரு பகுதியினர், தமக்கேற்பட்ட அரசியல், பொருளியல், இனவியல் கொடுமைகளையும், துயரமான அழிவுச் சூழல்களையும், தம் தாயினத் தமிழர்கள் பெரும்பான்மையினராக வாழும் தமிழ்நாட்டில் வந்து பேசுவது **'இந்து'**வின் கருத்துப்படி தவறானதும், குறும்புத்தனமானதும், முதலமைச்சர் திரு. இராமச்சந்திரன் அவர்களின் கருத்துப்படி வருந்தத்தக்கதும் ஆகும் என்றால், இலங்கை தவிர, சிங்களவர்கள் மருந்துக்கும் வாழாத தமிழகத்தில்-இந்தியாவில் திரு. செயவர்த்தனே வந்து-தம்நாட்டு அரசியலைப் பேசியது அதைவிடத் தவறானதும் குறும்புத்தனமானதும், கண்டிக்கத் தக்கதுமாகும். இந்துவும், ம. கோ. இரா. வும் இது போலும் கருத்துகளை ஏன் அப்போது கூறவில்லை?

வாழவும் விடாமல், அழியவும் விடாமல், உலகின் கண்களுக்குத் தமிழர்களுக்கு நலஞ் சேர்ப்பதுபோல் பேசுகின்ற அதே பொழுதில், உள்நாட்டு நடைமுறைச் செயல்களாலும் அடக்குமுறைக் கொடுமைகளாலும், படைத் துறையினரையும் காவல் துறையினரையும் ஏவி,

அவர்களைக் கொடுமைப் படுத்திவரும் சிங்கள அரசின் உள்முக நடவடிக்கைகளை நேரிடையாக அங்கே போய்ப் பார்த்துத் தெரிந்து கொள்ளாமல், ஏற்கனவே முதலமைச்சர் அணிந்துள்ள கருப்புக் கண்ணுடியுடன், **'இந்து'** நாளிதழ் காட்டும் கருப்புக் கண்ணுடி வழியாகவும் பார்த்து, தமிழர் தலைவரை இழிவு படுத்திப் பேசுவது மிகவும் வருந்தத்தக்கதும் கண்டிக்கத் தக்கதுமாகும்.

இன்னும் உண்மையான இன உரிமை விடுதலைப்போர் அங்குத் தொடங்கி விடவில்லை. அதற்குள் அங்கு நடந்துள்ள இனக் கொடு-மைகள், அநாகரிக அட்டூழியங்கள், காட்டு விலங்காண்டித்தனமான கயமைச் செயல்கள் இவற்றின் தாக்குதலால் உள்ளம் புழுங்கி, உயிர் துடிதுடித்த தமிழர் தலைவர் உண்மையான தம் மனக் கொதிப்பையும் ஆற்றுமையையும், தம் பெற்ளேரிடம் கூறி ஆறுதல் கோரும் அடி பட்ட குழந்தையைப் போல், மிகவும் உரிமையுணர்வுடனும், நாகரிக மாகவும், அறிவு திறம்பா நடுநிலையுடனும் இங்குத் தமிழ் மக்களிடம் பேசிச் சென்றிருப்பதை உண்மையான அரசியல் நாகரிகம் தெரிந் தவர்கள் குறைகூற மாட்டார்கள்! அவ்வாறில்லாமல் போனுலும் தமக்கு அதிகாரம் உண்டென்றுலும் பண்பும் இரக்கமும் கூட உண்டென்ற நிலையில், அமைதியாகவேனும் முதலமைச்சர் இருந் திருக்கலாம். அப்படியின்றி அமிர்தலிங்கம் பேசிய முறையிலும் நடந்து கொண்ட நிலையிலும் நிறைவின்றிக் குறைகூறிப் பேசியது பரந்துபட்ட உலகத் தமிழ் இனத்தையே ஊறுபடுத்தியதாகும்.

மேலும் மதுரையில் கட்சி வண்டியில் தவறுதலாக அமிர்த லிங்கமும் அவர் துணைவியாரும் ஏற்றப் பட்டார்களே தவிர, விருப்ப மாகவோ, அல்லது தெரிந்தோ அவர்கள் அதில் ஏறவில்லை. இதைப் போய்ப் பெரிதுபடுத்தி முதலமைச்சர் அமிர்தலிங்கத்திற்கு மாசு கற்பிக்கும் வகையிலோ, அவர் ஒரு கட்சிச் சார்பாக நடந்து கொள்பவர் என்ற முறையிலோ தவருகப் பேசியுள்ளார். இங்கு நாம் இன்னென்றையும் கேட்க முடியும். திரு. அமிர்தலிங்கம் ஒரு கட்சிக் காரரால் அவர்கள் கொணர்ந்த வண்டியில் ஏற்றப்படும் பொழுது, தமிழக அரசு அதிகாரிகளும், முதலமைச்சர் கட்சியைச் சேர்ந்தவர் களும் தாம் கொணர்ந்த அரசு வண்டிக்கு ஏன் அவரை அழைத்துப் போகவில்லை? வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள், தங்களைச் சூழ்ந் துள்ள பல்லாயிரக்கணக்கான மக்கள் நடுவில் பரபரப்பில் யார் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதை எவ்வாறு அடையாளம் கண்டு கொள்ள முடியும்?

மேலும் தமிழக அரசு அவரை விருந்தினராக உள்ளன்போடோ அல்லது கரவாகவோ, அல்லது உண்மையான பெருமை தரவேண்டும் என்று கருதியோ, ஏற்றுக் கொண்டாக வைத்துக் கொண்டாலும், தமிழ்நாட்டில் உள்ள வேறு கட்சியினர் அவரை வரவேற்கவே கூடாதா? வாழ்த்தவே கூடாதா? மேலும் அவர் தமிழ் நாட்டிற்கு வருமுன்னரே அரசு அவரைத் தம் விருந்தினராக ஏற்றுக் கொள்ளும்

என்று ஏன் முன்னறிவிப்புச் செய்யவில்லை? அவர் தமிழகத்தில் வந்திறங்கியவுடன் எதிர்க் கட்சி வண்டியில் ஏறும்படி தமிழக அரசு அவரை ஏன் விட்டு விட்டது?

அவர் ஒரு கட்சிக்கோ, ஒரு தனிப்பட்டவருக்கோ சொந்த முடையவரல்லர். தமிழ் மக்கள் அனைவரின் சொந்தத்திற்கும் உரிமைக்கும் பொதுவானவர் அவர்! அப்படிப்பட்டவரை ஏதோ தெரிந்தோ தெரியாமலோ எதிர்க் கட்சியினர் கொணர்ந்த வண்டியில் ஏறினார் என்பதற்காகக் குறைகூறிப் பேசுவது முறையில்லை. இலங்கைக் குடியரசுத்தலைவர் திரு. செயவர்த்தனா தமிழ்நாட்டிற்கு வந்திருந்த பொழுது ஒரு பெரிய வணிகச் செல்வரின் விருந்தினராக இருக்கலாம். அந்நாட்டின் எதிர்க்கட்சித் தலைவரான இவர் இந் நாட்டின் எதிர்க்கட்சியினர் கொணர்ந்த வண்டியில் ஏறியதுதான் பிழையோ? இதைக் குற்றஞ் சாட்டுவது எவ்வளவு நடுநிலை பிறழ்ந்த செயல்!

எப்படியோ, மிக அண்மையில் உள்ள தமிழின நெருக்கடிகளை, இங்குள்ள தமிழ் மக்கள், தெளிவாக உணர்ந்துகொள்ள வாய்ப்பில்லாம லிருந்தனர். தமிழகத்திலுள்ள செய்தித்தாள்களும், இங்குள்ள திரைப் பட நடிகர், நடிகைகளின் உள்முகக் கமுக்கச் செய்திகளைப் பக்கம் பக்கமாக வெளியிட்டுத் தமிழ் மக்களின் காசு பணங்களையும் அறிவு மனங்களையும் பறித்துக் கொண்டுள்ளனவே தவிர, உலகில் வாழ் தமிழர்களின், குறிப்பாக இலங்கை வாழ் தமிழர்களின் வாழ்வியல் இடர்ப்பாடுகளை இதுவரை அக்கறையுடனும் ஆர்வத்துடனும் வெளி யிட்டதில்லை. என்றாலும், திரு. திருவாட்டி அமிர்தலிங்கம் அவர் களின் வருகைக்குப் பின் தமிழ்மக்கள் அவர்களின் உணர்வும் உண்மையும் மிக்க சொற்பொழிவுகளாலும், அம்மையார் பாடிய காசியின் உணர்வுப் பாடல்களாலும் தமிழீழ மக்களின் அரசியல் தாக்குதல்களையும், அழிவுகளையும் நேரிடையாக விளங்கிக் கொண்டனர். எனவே இனி எதிர்காலத்தில் அவர்களின் தொல்லை துன்பங்களில் கட்டாயம் தோள் கொடுத்துத் தாங்குவர் என்பதில் ஐயமிருக்காது. திரு. அமிர்தலிங்கத்தின் தமிழக-இந்திய வருகையால் கிடைத்த பெரும்பயன் இது! இதை **இந்து** நாளிதழ் ஆசிரியர்களும் அவரைச் சார்ந்தவர்களும் நன்கு உணர்ந்து கொள்வார்கள் என்று நம்புகின்றோம்.

—பெருஞ்சித்திரனார்.

அ. வ. ப. ஆசைத்தம்பி மறைவு

தன்மானந் தாழாத பெரியார் தொண்டரும், தமிழக விடுதலைக் கொள்கையை இறுதிவரை கை நெகிழ்க்காத தமிழ் மறவரும் ஆகிய **அ. வ. ப. ஆசைத்தம்பி** பா. உ. அவர்களின் மறைவு குறித்து ஆழ்ந்த இரங்கலைத் தொடர்புள்ள அனைவர்க்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.

—ஆசிரியர்.

தமிழ்ப்பண்பாட்டின் தனிச்சிறப்புகள்!

முன்தோன்றி மூத்தகுடி.

குமரிநாட்டு வானநூலறிவும் தலைக்கழகக் காலமும்.

– பேராசிரியர் **இரா. மதிவாணன். க.மு.**

குடிநலன் காத்துக் கோலோச்சும் பழந்தமிழ் வேந்தரின் கோனாட்சி முறை உலகிலேயே தொன்மையும் முன்மையும் கொண்டதாகும். உலகிலேயே கி.மு. 10000 ஆண்டுகட்கு முந்திய வேந்தராட்சி முறை பற்றிய வரலாறு தமிழருடையது. அதனை அறிய சில சான்றுகளை வானநூல் வரலாறு (History of Astronomy) எழுதப் பட்டிருப்பின் எந்தெந்த கோள் நிலைகளின்போது அல்லது மீன் நிலைகளின்போது மண்ணுலகில் வெள்ள ஊழிகள், கண்டப் பெயர்ச்சிகள் (Continental drifts) நிலமாற்றங்கள் ஆகியவை ஏற்பட்டன என்றறிந்து தொல்பழங்கால வரலாற்றைக் கணித்தறிய முடியும். அவ்வாறில்லாததால் வெள்ள ஊழிகளின் காலத்தைக் குறிக்கும் நூல்களிலிருந்து தொல்பழங்கால வரலாற்றை அறியவேண்டியிருக்கிறது.

மகாவம்சம் என்னும் நூலில் கி.மு. 2350-இல் பெரிய கடல்கோள் ஏற்பட்டதாகவும் அப்பொழுது இலங்கை தமிழகத்திலிருந்து தனித்தீவாகப் பிரிந்து விட்டது என்றும் கூறப்பட்டுள்ளது. கடல்கொண்ட குமரி நாட்டின் ஒரு பகுதியாகிய தென்பாலி அல்லது தில்முன் என்றும் பழந்தமிழ் நாட்டிலிருந்த மன்னன் ஒருவன் வான நூல், கணிய (சோதிட)க்கலைகளில் தேர்ந்திருந்தான். எகுபதிலிருந்து திசை தவறி வந்த கப்பலொன்று இவன் நாட்டருகில் புயலால் மூழ்கியபோது அதிலிருந்து தப்பி வந்த இளைஞனொருவனை ஆதரித்து அவனுக்கு வேண்டுவன தந்து, இந்த நாடு இன்னும் சில காலத்திற்குள் கடலில் மூழ்கிவிடும் என்று கூறி அவனைப் பாதுகாப்பாக மற்றொரு கப்பலில் ஏற்றி எகுபதுக்கு அனுப்பினான். இச்செய்தி எகுபதில் கிடைத்த காபிரசுச் சுருளேட்டில் 'கலங்கவிழ்ந்த இளைஞன் கதையாக' (Ship wrecked Sailor's Story) கூறப்பட்டிருப்பதாக 'The Riddles of three Oceans' என்னும் நூலில் எடுத்துக்காட்டப் பட்டுள்ளது. வான நூலிலும் கணிய (சோதிட)க்கலையிலும் வல்ல தமிழ் மன்னன் கடல்கொண்ட தென்னாட்டில் வாழ்ந்த காலம் கி.மு. 6000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாக இருக்கவேண்டும். மகாவம்சம் கூறும் செய்தியையும் தென்பாலி நாட்டுத் தமிழ் மன்னனின் கதையையும் மூன்று தமிழ்க் கழகங்களின் காலத்தோடு ஒப்பிட்டு ஆராய்ந்தால் பழந்தமிழ் மன்னர்களின் காலத்தைப் பின்வருமாறு கணிக்கலாம்.

முதல்தமிழ்க்கழகம் 89 மன்னர்களின்காலத்தில் 4440 ஆண்டுகள் நடைப்பெற்றது. முதன் மன்னன் காய்சின வழுதி. கடைசி மன்னன் கடுங்கோன். இரண்டாம் தமிழ்க்கழகம் 59 மன்னர்களின் காலத்தில் 3700 ஆண்டுகள் நடைபெற்றது. இரண்டாம் தமிழ்க்கழகம் கபாட

புரத்திலிருந்து (கதவபுரம்) போது இலங்கை தமிழகத்தோடு ஒட்டி யிருந்தது. மகாவம்சத்தின் கூற்றுப்படி இரண்டாம் தமிழ்க்கழகம் முடிந்த காலம் கி.மு. 2350. இரண்டாம் தமிழ்க்கழகத்தின் தொடக்கம் கி.மு. 2350 + 3700 = கி.மு.6050. எனவே, வெண்தேர்ச் செழியன் கி.மு· 6050-இல் இரண்டாம் தமிழ்க்கழகத்தைத் தோற்று வித்தான் என்றும் அது முடத்திருமாறன் காலத்தில் (கி.மு.2350) அழிந்தது என்றும் அறிகிறோம்.

இரண்டாம் தமிழ்க்கழகத்திற்கு 4440 ஆண்டுகளுக்கு முன்பு முதல் தமிழ்க்கழகம் (தலைக்கழகம்) கடல்கொண்ட குமரி நாட்டில் பஃறுளி யாற்றங்கரையிலிருந்த தென்மதுரையில் நடைபெற்றது. அதன் காலம் கி.மு.6050 + 4440 = 10490. எனவே, முதல் தமிழ்க் கழகத்தைத் தோற்றுவித்த காய்சின வழுதியின் காலம் கி.மு. 10490 என்று ஐயமறத் துணியலாம். முதல் தமிழ்க்கழக காலத்தில் 89 மன்னர்கள் வாழ்ந்திருப்பதால் ஒவ்வொருவர் ஆட்சிக்காலமும் ஏறத்தாழ 48 ஆண்டுகள் ஆகிறது. இதில் கற்பனையோ புதுமையோ இருக்க முடியாது. இரண்டாம் தமிழ்க்கழக காலத்தில் ஒவ்வொரு மன்னரின் ஆட்சிக்காலமும் ஏறத்தாழ 61 ஆண்டாகிறது. முதல் தமிழ்க்கழகத்தின் கடைசி அரசனான கடுங்கோனின் காலம் கி.மு. 6050.

கடல் கொண்ட குமரி நாடு ஏழேழ் நாற்பத்தொன்பது நாடு களாகப் பிரிந்திருந்தது. முதல் தமிழ்க்கழக காலத்தில் பெருவள நாட்டு மன்னனாகிய செங்கோன் அலெஃசாந்தரைப்போல தரைவழிச் செலவு மேற்கொண்டு பல நாடுகளை வென்றவனாகக் கூறப்படுகிறான். இவன் மீது பாடப்பட்ட 'செங்கோன் தரைச் செலவு' என்னும் பாவியம் தாப்புலிப்பா என்னும் பாடல் வகையைச் சேர்ந்தது. தாப்புலிப்பா எந்தப் பாவகையைச் சார்ந்தது என்று யாருக்கும் தெரியாது. ஏனெனில் தொல்காப்பியத்தில் கூட அப்பெயர் இல்லை. இதிலிருந்தே அது முதல் தமிழ்க்கழக நூல் என்று தெரிகிறது. வடிம்பலம்ப நின்ற நெடியோன் என்னும் முதல் தமிழ்க்கழகக் கால மன்னன் கடல்வழிச் சென்று பல நாடுகளை வென்று அந்நாட்டுக் கடலலைகளைத் தன்கால்பாதம் அலம்புமாறு நின்றவன் என்று கூறப் படுகிறான். எகுபது பாபிரசு ஓலைச் சுருளில் கூறப்படும் மன்னனும் முதல் தமிழ்க்கழக காலத்தவனேயாதால் வேண்டும். அவன் முதல் தமிழ்க்கழக கடைசி மன்னனாகிய கடுங்கோனாக இருத்தல் வேண்டும்.

செங்கோன் மன்னனின் பெயரில் இன்றும் மடகாசுகர் தீவில் செங்கோதரா என்னும் ஊர் கடற்புறத்தில் உள்ளது. செங்கோனின் காலம் கி.மு. 9000 என்றும் வடிம்பலம்ப நின்ற நெடியோனின் காலம் கி.மு. 8000 என்றும் கணிக்கலாம். எனவே, தமிழரின் கடல் வாணிகமும் வானநூற் கலையும் தோன்றி வளர்ந்த காலம் கி.மு. 8000ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பது தெளிவாகிறது. அதன்படி

மூன்று தமிழ்க்கழக மன்னர்களின் காலத்தைப் பின்வருமாறு கணிக் கலாம்.

1. முதல் தமிழ்க்கழகம்-கி.மு. 10490- கி.மு. 6050.

- காய்சின வழுதி கி.மு. 10490
- செங்கோன் கி.மு. 9000
- வடிம்பலம்ப நின்ற நெடியோன் கி.மு. 8000
- கடுங்கோன் கி.மு. 6051

2. இரண்டாம் தமிழ்க்கழகம்-கி.மு. 6050-கி.மு. 2351

- வெண்தேர்ச்செழியன் கி.மு. 6020
- வாரணன் அல்லது வாணன் கி.மு. 4000
- நிலந்தரு திருவிற் பாண்டியன் (தொல்காப்பியம் அரங்கேற்றம்) தோரா.கி.மு. 2500
- முடத்திருமாறன் கி.மு. 2351

3. மூன்றும் தமிழ்க்கழகம்-கி.மு. 2350-கி.பி.200

- முடத்திருமாறன் (மணலூரில் 400 ஆண்டுகள் தமிழ்க் கழகம் நடந்திருந்த காலம்) கி.மு. 2350
- பாண்டியன் பெயர் தெரியவில்லை (வையைக் கரையி லுள்ள மதுரையில்) கி.மு. 1950
- பாண்டியன் உக்கிரப் பெருவழுதி கி.பி. 200

வையைக் கரையில் மூன்றும் தமிழ்க்கழகம் நடைபெற்றகாலம் 1850 ஆண்டுகள் என்று இறையனூர் களவியல் கூறுகிறது. ஆனால் கடல் கொள்ளப்பட்டுப் போந்திருந்த முடத்திருமாறன் மணலூரில் தமிழ்க்கழகம் வைத்திருந்த இடைக்காலம் 400 ஆண்டுகள் கூறப் படவில்லை. மணலூர் கடல் கொண்டபின் மூன்றும் தமிழ்க்கழகம் மதுரையில் நிறுவப்பட்டது.

சீனர்கள் கி.மு. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய சீன மன்னரின் வரலாற்றை எழுதி வைத்துள்ளனர். அமெரிக்க நாட்டு மாயர்கள் கி.மு. 9000க்கு முந்திய நாகரிக மாந்தரின் வரலாற்றைப் பெற்றுள்ளனர். தமிழர் கி.மு. 50000 ஆண்டளவிலான நாகரிக மாந்தர் வரலாற்றைப் பெற்றுள்ளனர். கால வெள்ளத்தில் மூழ்கடிக்கப் படமுடியாத வகையில் கி.மு. 10,490-இல் தலைக்கழகம் நிறுவித் தமிழ்வளர்த்த பஃறுளியாற்றுத் தென்மதுரைப் பாண்டியனுக்கக் காய் சினவழுதி முதல் மரபுவழி பிழையாத வேந்தராட்சி முறை பழந் தமிழகத்தில் நிலவி வந்துள்ளது. அது மட்டுமன்று. கடைக்கழக

நூல்: இந்தி...யா? இந்தியாவா?

ஆசிரியர்: திரு. கே. எசு. ஆனந்தம், வணி.இ., ச.இ.,

கிடைக்குமிடம்: சிவலிங்க நூற்பதிப்புக் கழகம்
அ. பெ. எண் 2. 3, மண்டப வீதி, ஈரோடு-638001.

விலை: உருபா. 5-00. பக்கம்: 146.

திரு. கே. எசு. ஆனந்தம் அவர்கள் வழக்குரைஞராகப் பட்டம் பெற்று விளங்குவதுடன் தமிழ்மொழிப் பற்றாளராகவும் விளங்குவது பாராட்டற் பாலதாகும்! இந்தி...யா? இந்தியாவா? என்னும் ஆட்சி மொழிச் சிக்கல் குறித்த ஆய்வு நூல் இது. பத்துத் தலைப்புகளில் இந்தி மொழி எவ்வெவ்வாறு இந்நாட்டு மக்களைச் சட்டத்தின் வழி ஏய்த்தும் ஏமாற்றியும் ஏற்றம் பெற்று இனியும் இன்னல் பல! தர விருக்கிறது என்னும் வரலாற்றைப் பொறுப்புணர்வோடும் நடுநிலை யோடும், ஒரு கட்சியைச் சாராமலும், தெளிவோடும் ஆய்ந்தெழுதி யுள்ளார்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் மொழி பெயர்ப்புப் பகுதியும், ஆட்சி மொழி ஆணைக்குழுவின் பரிந்துரை நெறிகளும் மொழி பெயர்த்தளித்திருப்பது மிக நல்லதாம். ஆங்கில மறியாதார் வட நாட்டரசு தமது தாய்மொழியாம் இந்தியை எவ்வளவு கரவாகவும் நரித்தனமாகவும் வெறியுடனும் மற்ற இனத்தினர் மீது திணித் துள்ளனர் என்பதைக் 'கண்ணுடிப் பேழையின் காட்சிப் பொருளைப் போலத்' தெள்ளத் தெளியச் சட்ட நுணுக்க மேற்கோள்களையுங் காட்டி ஆசிரியர் சுவைமிக்க துப்பறியும் புதினத்தின் நடையோட்டத் தோடு எழுதியுள்ளார். இந்நூலைப் படிக்க எடுப்பவர் படித்து முடித்த பின்னரே வைப்பர். அவ்வளவு எளிமையாக நயமாக ஓட்டத்துடனும் உணர்வெழுச்சியுடனும் எழுதியுள்ள ஆசிரியரின் ஆற்றல் பாராட்டத் தக்கதாகும்.

(முன்பக்கத் தொடர்ச்சி)

காலத்திலேயே நாற்பத்தொன்பது தலைமுறைகளாக (குறைந்தபக்கம் கி.மு. 1500 முதல் கி.பி. 200 வரை) சிற்றரையம் பேரரையம் என்னும் தமிழ்நிலப்பகுதிகளை ஆண்டு வந்த இருங்கோவேளின் (மன்னர் மரபின்) கால்வழியினர் இன்னும் வாழ்ந்து வருகின்றனர். அவருள் ஒருவர் ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

உலகத்தொன்முது நாகரிக நாடுகளின் வரலாற்றோடு தமிழக வர லாற்றை ஒப்பிட்டுப் பார்த்தால் தமிழர் எத்துணைப் பெரிய பண்பட்ட மரபின் பிறங்கடைகள் என்பது வெள்ளிடை மலையென விளங்கும். ○

'இந்தி பேசும் மாநிலங்கள் 6; வேறு தாய்மொழிகளைப் பேசும் மாநிலங்கள் 16; நடுவரசு நேராட்சிப் பகுதிகள் 7. இந்நிலையில் 6 மாநிலத்தாரின் மொழியை 23 மாநிலத்தார் மீது சுமத்துவது திணிப்பன்றோ?' என்று கேட்கும் போது ஆசிரியரின் அஞ்சாமை விஞ்சுகிறது.

இந்தி பேசாதார் விழுக்காடு 72.7% ஆகும். இந்தி பேசுபவர் 27.3% விழுக்காடு ஆகும் என்பதைச் சுட்டிக்காட்டிப், பொய்யான புள்ளிக் கணக்களித்து இந்தி வெறியர் பிற தாய் மொழியினரை ஏமாற்றி, வல்லாண்மை புரிவதைத் தெளிவாக்கியுள்ளார் ஆசிரியர்.

"இந்திக்குத் தனித்த எழுத்து முறையில்லை. சமற்கிருத தேவ நாகரி வரி வடிவையே அது ஏற்றுக் கொண்டுள்ளது." (ப:34)

அரசு வேலை வாய்ப்புகளில் சமநிலையைப் பற்றிக் கூறும் அரசமைப்பு 16 (2) ஆம் பிரிவில் திட்டமிட்டே 'மொழி' என்பதை விலக்கி வைத்த வடவரின் கொடுமனப் போக்கை அருமையாக ஆய்ந்தெழுதியுள்ளார் ஆசிரியர்.

இந்தியை ஆட்சி மொழியாக்கவும் வளமுறுத்தவும் நடுவரசு மேற்கொள்ளும் முறைகள், திட்டங்கள், பொருட் செலவுகள் முதலியன குறித்து ஆசிரியர் விளக்கும் பகுதிகளை தமிழர் யாவரும் **நன்கு புரிந்து கொண்டு படிக்க வேண்டிய பகுதிகளாகும்.** ஆணைகளின் வழியாக இந்தி வெறி பிடித்த அலுவலர், அமைச்சகத்தினர் இந்தித் திணிப்பைச் சட்டத்தைக்காட்டி அச்சுறுத்தி எவ்வாறு அன்று தொட்டின்றுவரை திணிக்கின்றனர் என்பதை 'அரசாணையிட்ட நாள்' முதலிய குறிப்புகளோடு மறுப்பளிக்க வியலாவண்ணம் ஏரண நெறியோடு எழுதியுள்ளார் ஆசிரியர்.

நேருவின் உறுதி மொழி எவ்வளவு பயனற்றதென்பதையும், அதன் உருப்படாத தன்மையையும் வழக்குரைஞர் தெளிவாக்கியுள்ள பகுதி நம் நாட்டரசியலாளர் படித்துணரத் தக்க பகுதியாகும்.

ஆசிரியர் 'மும்மொழித் திட்டத்தின்' கயமை சான்ற சூழ்ச்சியை விளக்கி, ஒருமைப் பாடென்பது ஒரு மொழித் திணிப்பால் ஏற்படுவதன்று (126) என விளக்கி 'ஆட்சி மொழி இந்தியே' என்னுஞ் சட்டப் பிரிவை முற்றுமாக அகற்ற வேண்டும் என்கிறார். மாநில மொழிகள் மாநில ஆட்சி மொழிகளாக முழுமையான அளவில் அமைதல் வேண்டும் என்றும், தொடர்பு மொழியாக 'ஆங்கிலமே' விளங்க வேண்டுமென்றும், VIII ஆம் அட்டவணையில் உள்ள எல்லாத் தாய்மொழிகளிலும் நாடாளுமன்ற அவைகளில் பேசுமுரிமை அமைய வேண்டும் என்றும் ஒரு தீர்வு காண்கிறார்.

இத்தீர்வை நடுவரசு ஒரு நாளும் ஏற்கப் போவதில்லை என உணர்ந்துதான் ஆசிரியர் நூலுக்குப் பெயர் சூட்டியுள்ளார். 'இந்தி...யா? இந்தியாவா?' தமிழினிமே, விரைந்து தீர்ப்பளிக்க முனைக!

—அறிவன்.

தமிழ் இலக்கியங்களின் முன்மையும் சமற்கிருத இலக்கியங்களின் பின்மையும்

புலவர். பொான். முகிலன்.

மாந்தன் பிறந்த மாபெரும் குமரிநிலத்தில் தோன்றிய மொழி தமிழ். இதனை மிகச் செப்பமாக வளர்க்கக் கழகம் தோன்றியதும் குமரி நிலத்திலேயே. எனவே, தமிழ் இலக்கியங்கள் குமரி நிலத்திலேயே தோன்றிவிட்டன.

குமரிக்கண்டத் தமிழ் இலக்கியங்கள் நேராக நமக்குக் கிடைக்க வில்லை. என்றாலும், அதன் வழிவந்த இலக்கியங்களும் இன்றமிழ்ப் பாடல்களும் தமிழில் இன்றும் உள்ளன.

உண்மை வரலாறு இவ்வாறு இருக்க, குமரிக் கண்டத்தைக் கடல் கொண்டபின் தோன்றிய 'வேதமொழி' எழுத்தில்லாதே பல ஆண்டுகள் வழங்கிவந்து, பின்பு வட தமிழாகிய பிராகிருதத்தின் துணையாலும் தென் தமிழின் ஊட்டத்தாலும் சமற்கிருதமாகச் செப்பம் செய்யப்பட்டது.

முற்றிலும் செயற்கைத் தன்மையுடைய இம்மொழியில் எழுந்த இலக்கியங்களே தமிழ் இலக்கியங்கள் எல்லாவற்றிற்கும் முதல்நூல் களாகும் என்றும், வழிகாட்டி என்றும் இடைக்காலத்தில் நம்பப் பட்டது.

உண்மை ஆய்வுகளால் இப்போலித்தன்மை இன்று தகர்த் தெறியப்பட்டுள்ளது. என்றாலும், தமிழைத் தேர்வுக்கு மட்டும் படித்துத் தேர்ந்துள்ள (!) தமிழ்ப் பேராசிரியர்கள் சிலர், தமிழ் இலக்கியங்களுக்கெல்லாம் சமற்கிருதமே தாய் எனவும்; வழிகாட்டி எனவும் கூறித் தம் அறியாமையைக் காட்டி வருகின்றனர்.

தமிழ் இலக்கியங்களுக்குச் சமற்கிருத இலக்கியங்கள் எத் துணைப் பிந்தியது என்பதைக் காட்ட பன்மொழிப் பேரறிஞர் திரு. கா. அப்பாத்துரை அவர்களின் ஆய்வுக் கருத்துகளில் ஒருசில வற்றை இங்குத் தொகுத்து வழங்குகின்றேன்.

'வளரும்தமிழ்' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ள கருத்துகள்:

அ. தமிழ் மொழியில் இறந்த இலக்கியங்கள் போக, இன்றிருக்கும் தமிழ் இலக்கியங்களில் பெரும்பகுதி வடமொழியில் இலக்கியமே ஏற்படாத காலத்தைச் சேர்ந்தது. கழக (சங்க) இலக்கியம், அதுவும் கடைக் கழக இலக்கியம் மட்டுமே அளவிலும் பண்பிலும் உலகின் ஒரு தனி இலக்கியத்திற்கு ஒப்பானது. அஃது அத்தனையும் வடமொழி யின் முதற் பெரும் பாவலன் காளிதாசன் காலத்திற்கு முந்தியது. தமிழில் உள்ள பல இலக்கியங்கள் வட மொழி பிறப்பதற்கு முந்தியே பிறந்த இலக்கியங்களாகும். —பக்: 57

ஆ. வடமொழி 'தேவ' மொழி என்னும் கருத்து கம்பர் காலத்துக்கு முன் தமிழிலும் இல்லை, வடமொழியிலும் இல்லை. —பக்: 60

இ. கழகப்பாடல்களில் ஒரு சிறுபாடல் நூறு பெரிய புராணத்திற்கும் ஆயிரம் கம்பராமாயணத்திற்கும் மேம்பட்டது.
— பக்: 171

ஈ. திருந்திய இலக்கியத்தமிழ் செந்தமிழ் எனப்படுவது போலத் திருந்திய வடமொழி சமற்கிருதம் எனப்படும். இம்மொழியில் பாரதம், இராமாயணம், புராணங்கள், மிருதிகள், இலக்கணங்கள் ஆகியவை நீங்கலாக எல்லா நூல்களும் — இலக்கியங்களும் கி.பி. முதல் நூற்றூண்டுக்குப் பிந்தியவையே. இவற்றுள்ளும் புத்த சமயத்தவர் எழுதிய புத்த சரிதம் என்னும் பாவியமும் மண்ணியல் சிறுதேர் (மிருச்சகடிகா) என்னும் நாடகமும் மட்டுமே கி.பி. 5-ஆம் நூற்றூண்டிற்கு முற்பட்டவை. —பக்: 139

உ. சமற்கிருதத்தில் புத்தர் நூல்கள் நீங்கலாக வேதநெறியாளர் ஏற்கத்தக்க முதல் இலக்கிய நூல்கள் காளிதாசன் நூல்களே. வள்ளுவர் காலம் இதற்கு 500 ஆண்டுகள் முற்பட்டது. எனவே, வடமொழி இலக்கியம் எதனின்றும் வள்ளுவரோ, கழகக் (சங்க) காலப் புலவர்களோ கடன் பெற அங்கு இலக்கியம் என எதுவும் இருந்ததில்லை என்பதை உள்ளத்தில் கொள்க. —பக்: 140

ஊ. கழக இலக்கியங்கள் கி.பி. முதலிரண்டு நூற்றூண்டுகளைச் சார்ந்தவை என்பதும், தொல்காப்பியம் அவற்றினும் மிகத் தொன்மை வாய்ந்தது என்பதும் இப்போது தெளிவு பட்டுள்ளது. தமிழில் இக்காலத்திற்குமுன் இலக்கியமே இல்லையென்று கொண்டாலுங்கூட இந்தியாவில் வட மொழியான சமற்கிருதம் உட்பட எல்லா மொழி இலக்கியங்களுக்கும், தமிழ் இலக்கியங்கள் ஆயிரம் ஆண்டுகள் அல்லது அதற்கு மேலும் முந்தியன ஆகும். —பக்: 165.

உய்த்துணர்வில்லா, இவ்வாய்மை சான்ற வரலாற்றுக் கருத்திற்கு மறுப்பு இறுக்க வழியில்லை. (இருப்பின் முயலுக!) எனவே, சமற்கிருத இலக்கியங்கள் வளம்பெற உலகில் தமிழ் தான் உதவியது என்னும் மெய்ம்மையை உணருக. பிறருக்கும் உரைத்து உண்மைக்குத் துணை நின்று உயர்வு பெறுக.

பெரியார் நூற்றூண்டு விழாவை முன்னிட்டு நூல்கள் இலவயம்.

தந்தை பெரியார் அவர்களின் நூற்றூண்டு விழாவை முன்னிட்டு, 18 உருபா விலையுள்ள 2 ஆங்கில புத்தமத நூல்கள், 10 உருபா விலையுள்ள 4 தமிழ் நூல்கள் ஆக 6 நூல்களின் செலவினங்களுக்கு ரூ. 10. அனுப்பி வைப்பவர்களுக்கு இலவயமாய் அனுப்பப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி: —இரா. கசுத்தூரி, வழக்கறிஞர்,
டி. வி. சுவாமி தெரு, ஆர். எசு. புரம், கோவை-2.

பாவேந்தே வாழிய நீ!

—ச. தமிழ்வேலன் — மன்னார்குடி.

இசையின் அமுதே எழிலின் சிரிப்பே
அசைவில் அமைதிக் கடலே—வசையிலாக்
காதல் நினைவே கனிதமிழ்ப் பாவேந்தே
சாதல் நினக்குண்டோ சாற்று. 1

இருள்சூழ்ந்த வீட்டினில் ஏற்று விளக்கே
அருள்சூழ்ந்த மேகலை அன்பே—தெருள்சூழ்ந்த
நற்குறிஞ்சித் திட்டே நனிதமிழ்ப் பாவேந்தே
நிற்குளதோ சாவு நிகழ்த்து. 2

கோடை அகற்றும் குளிர்மலைச் சாரலே
நாடுபுகழ்ப் பாண்டியன் நற்பரிசே—கேடுற்ற
பைந்தமிழர் சற்றுமெதிர் பாராத முத்தமே
எந்தமிழாய் நின்றாய் இனிது. 3

ஈடில் இரணிய வீரனே வீரத்தாய்
நாடுந் தமிழியக்க நாயகமே—சாடுகின்ற
போரிளைஞர் வேலே புரட்சிக் கனற்பாவே
நீரிளைஞர் என்றும் நிலைத்து. 4

தன்மானங் காத்த தமிழச்சி கத்தியே
தென்னாட ஏற்றப்பாச் சித்திரமே—தென்னாட்டார்
உய்யப் பிறந்தோய் உயர்தமிழ்போல் வாழியநீ
வையம் உளநாள் வரை. 5

பெருஞ்சித்திரனாரின்

பாடல் தொகுப்புகள்.

(கனிச்சாறு தொகுப்புகள்)

அரிய பாடல் களஞ்சியம்!

தொடக்கக் காலத்திலிருந்து 1978-ஆம் ஆண்டு வரை எழுதப் பெற்றுத் தென்மொழி, தென்றல், முல்லை, பகுத்தறிவு, தமிழ்நாடு, வானம்பாடி, செந்தமிழ்ச்செல்வி, விடுதலை, தமிழ்ப்பொழில் முதலிய இதழ்களில் வெளிவந்துள்ளனவும், வராதனவுமாகிய பன்னூற்றுக் கணக்கான தலைப்புகளின் கீழ் ஆயிரக்கணக்கான பாடல்கள் ஒரு சேரத் தொகுக்கப் பெற்று நான்கு தொகுதிகளாக அச்சேறி வருகின்றன.

தீங்கனிச்சாறு! தெவிட்டாத தூய இனிய செந்தமிழ்ப் பெட்டகம்;
என்றென்றும் வைத்துப் போற்றவேண்டிய இலக்கியப் பாச்சுரங்கம்!
வெளியீட்டு நன்னாளை விரைவில் எதிர்பாருங்கள்!

சிலம்பிற் பிழையா?

புலவர். இறைக்குருவனார்.

இனி, மேற்குறித்த சிக்கலுக்கு நிலைக்களமாகவும் முன்னும் பின்னுந் தொடர்புற்றும் அமைந்துள்ள கதை நிகழ்ச்சிகளையும், அவற்றை நூலாசிரியர் நுவன்று செல்லும் திறத்தையும், சிற்சிலர் சிக்கலாகக் கொண்டு மயங்கியவற்றையும் தெளிவுறத் தெரிந்து கொள்ளுதல் வழுவற முடிபு காண்டற்கு இன்றியமையாததாகலின், முதற்கண்; மதுரைக் காண்டத்துப் 'புறஞ்சேரியிறுத்த காதை' முதல் 'கட்டுரை காதை' ஈறுன பதினொரு காதைகளின்கண் படர்ந்து கிடக்குங் கதை நிகழ்ச்சிகளை ஈண்டைக்கு வேண்டுமளவை இயைபுறத் தொகுத்துரைப்பாம்.

கோவலனும் அவன்றன் வாழ்க்கைத் துணைவியும் அவர் தமக்கு வழித்துணையாக வந்த கவுந்தியடிகளும் பாண்டிய நாட்டிற் செலவு மேற்கொண்டது வெப்பம் மிகுந்த முதுவேனிற் பருவமாதலின், அது காறும் பகற்பொழுதில் வழி நடந்து இராப்பொழுதில் ஓய்வு கொண்டு, நாளும் காவதமல்லது கடவாராகி ஆங்காங்குப் பன்னுள் தங்கிச்[1] சென்று கொண்டிருந்த அவர்கள் ஐயை கோட்டம் நீங்கிய பின்னர், இரவிடைக் கழிதற்கு ஏதமில்லெனக் [2]கருதிப் பகற்பொழுதில் ஓய்வு கொண்டு இரவின்கண் நிலவொளியிற் செலவு செய்தனர்.

கடகத் திங்கள் இருட்பக்கத்து- தேய்பிறை ஐந்தா நாள் **செவ்வாய்க்கிழமை** இரவும், மேற்கூறியாங்கு வழி நடந்து வந்த அம் மூவரும் கடைக்கங்குற் பொழுதில், தவமுனிவோர் வைகும் தாழ் பொழில் வாய்ந்த மதுரை மூதூர்ப் புறஞ்சேரியை அடைந்தனர். வழிநடைச் சோர்வினுல் அவ்வைகறை யாமத்தே சற்றுக் கண்ணயர்ந்த கோவலன், பின்னிலவுக் காலமாயினும் கன்னியிருள் செறிந்த அச்சிறு பொழுதில் ஒரு கொடிய கனவு கண்டனன்.

அறிவன் கிழமையன்று காலையில், கோவலன் கண்ணகியையும் கவுந்தியடிகளையும் அப் புறஞ்சேரிப் பொழிலகத்தே தங்குவித்துத், தான் எண்ணி வந்த வணிக முயற்சியின் பொருட்டு மதுரை வாழ் பெரு வணிகர்க்குத் தன் வருகை நிலையுணர்த்தி வருவதாகக் கூறி அடிகளின் அறிவுரை கேட்டு விடை பெற்றுச் சென்றனன். சென்று, மதுரை மா நகரின் பல்வேறு காட்சிகளையும் பகலெல்லாஞ் சுற்றித்திரிந்து கண்டுகளித்துச், சாயுங்காலத்தே புறஞ்சேரிக்கு மீண்டு, கவுந்தியடிகட்குத் தான் கண்டவற்றைக் கூறிக் கொண்டிருக்கும் போது, ஆங்கு வந்த மாடல மறையோன் கோவலனைக்

---

1. நாடுகாண் காதை: 154-5.
2. புறஞ்சேரி யிறுத்த காதை: 13.

கண்டு அவன் நிலைமையறிந்து அவன்றன் முன்னை நிலைகளையும் நினைவு கூர்ந்து அளவளாவினன்; அவன் அந்நிலைக் காளாயது பழவினைப் பயன்கொலோ என்று வினுயினன். அக்கால், கோவலன் கடந்த வைகறை யாமத்தே தான் கண்ட தீக்கனவைத் தெரிவித்து, அதன் பயன் விரைவில் நிகழும் என்றனன். என்றது கேட்ட கவுந்தியடிகளும் மாடலனும் துறவியரல்லாதார் அப் புறஞ்சேரிக்கண் இரவில் தங்குதல் பொருந்தாதென்றும், கண்ணகியை அழைத்துக் கொண்டு கதிரவன் மறைவுக்குமுன் மதுரைக்குள் புகுகவென்றும் கோவலனை நோக்கிக் கூறினர்.

இவ்வாறு இருக்கும்போது, ஆங்குவந்து தம்மை வணங்கிய ஆயர்முதுமகளாகிய மாதரியைக் கண்ட கவுந்தியடிகள் அவடன் சிறப்பியல்களை எண்ணி, அவட்கு அடைக்கலத்தின் மேன்மையையும், கண்ணகியின் நலங்களையும் எடுத்துக் கூறிப் பரிந்துரைத்து அவ் வாய்ச்சியின்பால் கண்ணகியை அடைக்கலப் படுத்தினர்.

மாதரி, கண்ணகி கோவலரை உடனழைத்துக் கொண்டு கதிரவன் மறைந்து ஒளி மங்கிக் கொண்டிருந்த மாலை நேரத்தே ஆயர் சேரிக்கண் தன் இல்லத்தை யடைந்தனள். அடைந்து ஒரு புதுமனைக்கண் அவ்விருவரையும் தங்குவித்தனள்; தூ நீராட்டினள்; தன் மகள் ஐயையை அவட்கு ஏவன் மகளாக ஏற்கவேண்டினள்; தேற்றுரை பகர்ந்தனள்; கோவலன் இராவுணவு கொள்ளா நோன்பின ஞகலின் மற்றை நாள் இளங்காலையிலேயே சமைத்தற்கு வேண்டுவன விரைந்தளிக்குமாறு ஆய்ச்சியர்க்குக் கூறினள். அவர்களும் அங்ஙனமே மடைக் கலங்களும் கூலங் காய்கனிகளும் அளித்தனர். கண்ணகி கோவலர் அற்றை இரவை அக் கடிமனைக்கண் கழித்தனர்.

வியாழக்கிழமை புலரிப் பொழுதிலேயே கண்ணகி சமைக்கத் தொடங்கினுள். ஐயை, அவட்கு அடுப்புப் பற்றவைத்துக் கொடுத்து உதவி செய்தனள்.

அரண்மனையிற் காலை முரசம் ஒலித்தது. அன்று அரண்மனைக்கு நெய்யளக்கும்முறை தமக்குரியதாம் என்பதை நினைவு கூர்ந்து தன் மகள் ஐயையை அழைத்தனளாய்த் தயிர் கடைதற்கு வந்த மாதரி, குடப்பாலுறையாமையும், காளைகள் கண்ணீர் வடிய நிற்றலும் முதலிய தீக்குறிகளைக் கண்டு "வருவதோர் துன்பம் உண்டு" என்று சொல்லி, ஐயையை நோக்கி "மயங்காதே!" இக் கண்ணகியுங் காணுமாறு குரவைக் கூத்தாடுவோம்; கன்று காலிகள் துயர் நீங்கும் என்று கூறினள். ஆய்ச்சியர், குரவைக்கூத்து ஆடுதற்குரிய ஏற்பாடுகளைச் செய்வாராயினர்.

கண்ணகி அன்பொடு சமைத்து முறையுறப் படைத்த அமுதினைக் கோவலன் இனிதே உண்டு கொண்டிருந்த காலை ஆங்கு வந்த

மாதரியும் ஐயையும் அக் கண்கொளாக் காட்சியைக் கண்டு "இந் நம்பியும் நங்கையும், கண்ணனும் நப்பின்னையுங் கொல்லோ!" என்று மகிழ்ந்து விம்மிதமெய்திச் சென்றனர்.

உண்டு இனிதிருந்த தன் கண்ணாளனுக்குக் கண்ணகி சுருளும் பிளவையும் (வெற்றிலை பாக்கு) அளித்தனள். அளித்துத் தனியளாய் நின்ற தன் ஆருயிர் மனைவியை அருகுற அமர்த்திப், பழைமை நினைந்து அவளொடும் அளவளாவி, அவட்கு ஆறுதல் கூறி, அவளைப் பலபடப் பாராட்டி, "நின் சீறடிச் சிலம்பு ஒன்று கொண்டு யான் போய் மாறி வருவன் மயங்காது ஒழிக!" என்று வாய் மொழிந்து, அன்புறத் தழுவினன்; தன் தலையில் சூடியிருந்த மாலையை, அவடன் குழலிற் சூடிக்கொள்ள அளித்தனன்; அவள் தனியளாய் இருப்பது கண்டு மனம் வெதும்பிச் சுரந்த கண்ணீரைக் கரந்தனனாய்ச், சிலம்பைக் கைக்கொண்டு, அவளைப் பிரிந்து மாட்டா நடையோடே செல்கின்றவன், இமிலேறு எதிர்ந்ததனையும் இழுக்கென்று அறியானாய்க், கடந்துசென்று கடைத்தெருவை யடைந்தனன். அடைந்து ஆங்கு எதிர்ப்பட்ட பொற்கொல்லனை யணுகிச் சிலம்பை விலை போக்கப் பேச்சுக் கொடுத்தான். பொற்கொல்லனோ, அச் சிலம்பு கோப்பெருந்தேவிக்கு மட்டுமே யாப்புறவுடைமையின் அதனைக் கொள்ளுந் திறத்துக் கோவேந்தற்குத், தான் போய் விளம்பி வருவதாகக் கூறிச் சென்றான். அக் கொடியவன் இல்லத்திற்கு அண்மையில் அவன் குறித்தவிடத்தே கோவலன் அவன்றன் வரவை எதிர்நோக்கி யிருந்தான்.

ஆயர்சேரித் தாதெரு மன்றத்தே, ஆய்ச்சியர் குரவை தொடங்கி நடந்து கொண்டிருந்தது. கணவனைப் பிரிந்த கண்ணகியின் உள்ளம் இனமறியாத இன்னலுற்றுக் கொண்டிருந்தது.

அரண்மனை வேத்தவையின்கண் ஆடன் மகளிர்தம் நாட்டியம் நடந்து கொண்டிருந்தது.

பொற்கொல்லன் பொல்லாச் சூழ்ச்சியொடு அரண்மனையை நோக்கி நடந்து கொண்டிருந்தான்.

நாடக மகளிர் தம் ஆடல் தோற்றத்தால் அரசன் உள்ளங் கவரப் பெற்றான் என்று ஊடல் கொண்டு, தலை நோய் வருத்தந் தன் மேலிட்டுக் கோப்பெருந்தேவி தன் கோயில் புகுந்து தாழிட்டுக் கொண்டனளாக, மந்திரச் சுற்றத்து நீங்கி மன்னவன் அந்தப் புரத்து, தாழிட்ட வாயிற்கண்ணே செல்லுங்காலை, ஆங்குப் போந்து அவன் அடிபணிந்தேத்திய பொற்கொல்லன் அரண்மனைச் சிலம்பைக் கவர்ந்த கள்வன் தன் இல்லகத்தே வந்துள்ளான், என்றமை கேட்டு ஊர் காப்பாளரைக் கூவினன்; அரசியின் சிலம்பு களவாடிய கள்வன் கையகத்தாயின் கள்வனைக் கொன்று, சிலம்பை ஈங்குக் கொணருமாறு ஏவினன்.

ஊர் காப்பாளர் உடன்வர, வந்த பொற்கொல்லன் அவர் தமக்குக் கோவலனைக் காட்டலும், அவர் கோவலன் முகப்பொலிவைக் கண்டு இவன் கள்வனோ அல்லனோ என்று மயங்கினர்; அவனைக் கொல்லத் தயங்கினர். பொற்கொல்லன் பற்பல கட்டியுரைத்தான். அரசன் தண்டனைக்காளாவீர் என்று அச்சுறுத்தினான். கல்லாக் களிமகன் வீசிய வெள்வாள் விலங்கூடறுப்பக் கோவலன் வீழ்ந்தான்!

ஆயர் சேரியில் குரவைக்கூத்து முடிந்தது. ஆயர் முதுமகள் திருமால் வழிபாட்டின் பொருட்டுப் பூ முதலியவற்றைக் கைக் கொண்டு வையைத் துறைபடியப் போயினள். அரண்மனைச் சிலம்பையே களவாடியவன் எனப்பெற்றமையானும், கொலைத் தண்டங் குறிக்கப் பெற்றமையானும் குடியிருப்புப் பகுதியிலேயே வெட்டப் பெற்றமையானும் கோவலன் வெட்டுண்ட செய்தி காட்டுத் தீப்போல் நகரெங்கும் பரவியது.

பரவிய செய்தி கேட்டு விரைந்து வந்தவள் ஒருத்தி, ஆயர் சேரியை யடைந்து, ஆய்ச்சியரிடம் தான் கேட்டது கூறினள். அது கேட்ட ஆய்ச்சியர், கண்ணகியை நோக்கியும் சுட்டியும் அவள் முழுமையாக அறிந்து கொள்ள முடியாதபடி வருத்தந் தோன்றச் சிற்சிலகூறி நின்றனர். செய்தி கொண்டு வந்தவளோ, கண்ணகிக்குச் சொல்ல நாவெழாது நின்றாள்.

தன் தலைவன் தன்னை விட்டுப்பிரிந்து சென்ற நேரந்தொட்டே இனமறியாத துன்பத் தாக்குதலுற்று நெஞ்சழிந்திருந்த கண்ணகி, தன் நிலைமையைக்கூறி வந்தவளிடத்தே நிகழ்ந்தது என்னவென வினவினள். அவளும் கோவலன் களவுக்குற்றஞ் சாற்றப்பெற்றுக் கொலைத்தண்டங் குறிக்கப்பெற்ற செய்தியை வாய்விண்டாள்.

செய்தி கேட்ட கண்ணகி பொங்கியழுதாள்; அரற்றினாள்; செங் கதிரோனை நோக்கித் தன் கணவன் கள்வனோ என வினவினாள்; கள்வனல்லன், இவ்வூர் எரியுண்ணும் என்னுங் குரல் கேட்டாள். எஞ்சிய சிலம்பைக் கையிலேந்தி ஊரவரை நோக்கி முறையிட்டும் வஞ்சினங் கூறியும் அரற்றியவாறு மதுரைத் தெருவழியே சென்று கோவலன் வெட்டுண்டு கிடந்த இடத்தை யடைந்தாள்; அவன் தன்னைக் காணமாட்டாது சோர்ந்து கிடந்த அவலநிலையைக் கண்டாள். அவனைத் தழுவிக்கொண்டு அழுதாள். மனைவியின் வருகையால் கோவலன் சற்றே தென்புற்றெழுந்தான்; அவள் முகங் கன்றியிருப்பது கண்டு வருந்தினான்; அவள் கண்ணீரைத் தன் கையினால் துடைத்தான். துடைத்து 'இருந்தைக்க!' என்றுரைத்து உயிர் துறந்தான்.

மேற்படி நிகழ்ச்சிகளால் பெரிதும் மனங்குலைந்த கண்ணகி, அன்றிரவை அக்கொலைக் களத்திலேயே சொல்லொணாத் துயரத் தொடு கழித்தாள்.

அற்றை இரவு அரண்மனையகத்தே கோப்பெருந்தேவி கொடியதொரு கனவு கண்டாள்.

வெள்ளிக்கிழமை பொழுது புலர்ந்தது. புகாரில் தான் கண்ட தீக்கனவை நினைவு கூர்ந்த கண்ணகி அரண்மனையை நோக்கிச் சென்றனள்.

அரசன் அரியணையில் வீற்றிருந்தனன். பாண்டிமாதேவி மங்கலப் பொருள்களையேந்தி மங்கையர் சூழ வந்து அரசனைக் கண்டு கொண்டாள்; தான் கண்ட தீக்கனவைத் தெரிவித்துக் கொண்டிருந்தாள்.

கண்ணகி வாயிற்காவலன் வழித் தன் வரவைக் கோயிற் பெருமகனுக்கு அறிவித்து, அவன் அழைப்பிக்கச் சென்று வாயிலோன் காட்டக் கண்டு, வழக்குரைத்துத் தன் கணவன் கள்வனல்லன் என்பதை மெய்ப்பித்தாள். தன் தவறுணர்ந்த பாண்டியன் மயங்கி வீழ்ந்து உயிர் துறந்தான். பாண்டிமாதேவியும் உடன் துஞ்சினள்.

கண்ணகி கோப்பெருந்தேவியை நோக்கி வஞ்சினமுரைத்துத் தீக்கடவுளை ஏவினள். மதுரை அற்றைப் பகலும் மாலையும் எரிந்து கொண்டிருந்தது. மக்களும் பிறவுயிர்களும் ஆங்காங்கு ஓடியொளிந்தனர்; சீத்தலைச் சாத்தனார் வெள்ளியம்பலத்தே பதுங்கிக் கிடந்தார். கண்ணகி வெந்த நெஞ்சினளாய் வெய்துயிர்த்து நகரத் தெருக்களிலும் சந்துகளிலுஞ் சுற்றியுங் கவன்று நின்றும், சென்ற வழியே மீண்டும், மயங்கியுஞ் சோர்ந்தும் ஒருநிலைப்படாது நடந்து கொண்டிருந்தாள். மாலையுங் கழிந்தது.

[நள்ளிரவில் ஆயர் முதுமகளான மாதரியம்மையார் அடைக்கலப் பொருளை யிழந்தேன் என்று தாதெரு மன்றத்தே தீப்பாய்ந்தார்.[1]]

தெய்வ நங்கையான மதுராபதி, ஆற்றாமை மிக்குக் கண்ணகியைப் பின் தொடர்ந்தாள். அவளொடு உரையாடிக் கோவலன் கண்ணகியரின் முற்பிறப்பு நிகழ்ச்சிகளையும், பழவினைப் பயனே அவர் தம் துன்பத்திற்குக் கரணியம் என்பதையும், மற்றுச் சங்கமன் மனைவி நீலியின் சாவப்படி, அன்று தொடங்கிப் பதினான்காம் நாள், கண்ணகி கோவலனை வானவர் வடிவில் கூடுவள் என்று பின்னுறுவதையும் அவட்கு உணர்த்தி, அவடன் சீற்றத்தைத் தணித்தாள்.

மதுரை தீயினின்றும் விடுதலை பெற்றது. காளி கோயிலில் கைவளை உடைத்துக் கண்ணகி வையைக் கரையோடே மேற்கு நோக்கிச் சென்றாள்.

(தொடரும்)

---

1. நீர்ப்படைக் காதை: 72-78.

எதை எப்படிக் கற்பது?

உயிர்ப்பு: **சான் இரசுகீன் (John Ruskin)**
பெயர்ப்பு: **கா. வல்லவன்**

ஆழ்ந்த படிப்பு (Intensive Reading):*

ஒரு நூலை ஆழ்ந்த படிப்பு முறையில் பயில வேண்டும். ஒரு பெரும் நூலகத்தில் அடுக்கி வைக்கப் பெற்றுள்ள பல்லாயிரக் கணக்கான நூல்கள் முழுவதையும் ஒருவன் படித்திருக்கலாம். ஆனால் 'சொந்தமாக எண்ணும்' ஆற்றல் அற்றவனாக இருப்பானேயானால், அத்தகையவன் கல்லாதவனினும் தாழ்ந்தவனாகவும் மட்டமானவனாகவுமே மதிக்கப்படுவான். அதேபொழுது ஒருநூலில் ஒருசில பக்கங்களை மட்டும் கூர்ந்து படித்துப் படித்துத் தெரிந்து கொண்ட ஒருசில கருத்துகளையே மேன்மேலும் ஆழ்ந்து எண்ணிப் பார்த்துத் தன் அறிவை வளர்த்து வளப்படுத்திக் கொள்ளக் கூடியவனே 'கற்றவன்' (Educated Person) எனும் சொல்லிற்குச் சிறந்த சான்றாகத் திகழக் கூடியவன். எனவே ஒருவன் எத்தனை நூல்களைப் படித்திருக்கிறான் என்பது பெரிதன்று; எப்படிப் படித்திருக்கின்றான் என்பதே பெரிதாகும்.

அறிவு நிலையைப் பொறுத்தமட்டில் கற்றவனுக்கும் கல்லாதவனுக்கும் இடையேயுள்ள பெரும் வேறுபாடானது ஒருவன் மற்றொருவனைவிட எந்த அளவிற்குத் துல்லியமான அறிவு பெற்றிருக்கின்றான் என்பதிலேதான் உள்ளது.

ஒருவன், தன் தாய்மொழியைத் தவிரப் பிறமொழி எதுவும் அறியாமல் இருக்கலாம். ஏன்? தன் தாய் மொழியைத் தவிர வேறு பல மொழிகள் இருப்பதையே முற்றிலும் அறியாதவனாகவும் இருக்கலாம். தன் தாய் மொழியிலும், தேர்ந்தெடுக்கப்பட்ட விரல்விட்டு எண்ணத்தக்க ஒருசில நூல்களையே படித்திருக்கலாம். ஆனால் தான் படித்து அறிந்து கொண்ட கருத்துகளையே மிகத் துல்லியமாக அறிந்திருப்பானேயானால், தான் பலுக்கும் ஒவ்வொரு சொல்லையும் மொழி மரபிற்கேற்ப முறைப்படி பலுக்குவானேயானால், தான் தெரிந்து கொண்ட ஒவ்வொரு சொல்லையும் அதற்குரிய சரியான பொருளில் தெரிந்துகொண்டு அவற்றை முறைப்படி தேவையான

---

*சான் இரசுகின் காலத்தில் கல்வி உளவியல் போதிய வளர்ச்சியடையவில்லை. ஆனால் இக்காலக் கல்வி முறையானது நூல் பயில் முறையை (Method of Reading) மூவகைப் படுத்தியுள்ளது.

1) ஆழ்ந்த படிப்பு (Intensive Reading)
2) அகன்ற படிப்பு (Extensive Reading)
3) தாவிப் படித்தல் (Skipping)

இடத்தில் கையாளக் கூடியதிறமை பெற்றிருப்பானேயானுல் அவனே 'கற்றவன்' ஆவான்!

ஒருவன் குருட்டுத்தனமாகப் பல மொழிகளை அறிந்திருக்கலாம். அவற்றைப் பேசலாம். ஆ னு ல் அவற்றிலுள்ள சொற்களையும் பொருளையும் முறைப்படி கையாளுகின்ற அறிவில்லாதிருப்பானே யானுல் அவன் எத்தனை மொழிகளை அறிந்திருந்தும், எ த் த னை நூல்களை நுனிப்புல் மேய்ந்து சென்றிருந்தாலும் அவன் 'கற்றவன்' ஆகமாட்டான்.

இதிலிருந்து, ஒரு நூலை ஆழ்ந்த படிப்பு முறையில் ப டி க் க வேண்டியதின் இன்றியமையாமையை உணரலாம்.

ஆழ்ந்த படிப்பு என்பது யாது?

ஒரு நூலைப் படிக்கும்பொழுது, அதனுள் அடங்கி யுள்ள அனைத்துக் கூறுகளையும் விரிவாகவும் நுணுகியும் கற்கும் முறையே ஆழ்ந்த படிப்பு மு றை எனப்படும். நூலை அணுகும் பொழுது தன் சொந்த விருப்பு வெறுப்புகளை ஒதுக்கி விட்டு, நூலாசிரியனின் (மன) நிலையில் இருந்து கொண்டு அந்நூலின் சொற்களின் அமைப்பு, சொற்றொடர்களின் அமைப்பு, மரபுவழி, சொல் வளம், கருததழகு, கற்பனை வளம் ஆகிய அனைத்துக் கூறுகளையும் விரிவாகவும், நுணுக்கமாகவும் கற்பதே ஆழ்ந்த படிப்பாகும்.

ஒரு நூலைப்படித்த பின்னர், 'நூலாசிரியன் இவ்வாறு எண்ணு கின்றுன்' என்ற முடிவிற்கு வரவேண்டுமேயொழிய, 'நான் இவ்வாறு எண்ணுகிறேன்' என்பது முறையற்ற பொருத்தமற்ற படிப்பு முறை யாகும்.

ஒரு நூலைப் படிக்கும் பொழுது நாம் என்ன எண்ணுகின்றோம் என்பது முகாமையன்று; நூலாசிரியன் என்ன எண்ணுகின்றுன் என்பதை நூலாசிரியனின் (மன) நிலையிலிருந்து காண்பதுதான் முகாமையாகும்.

ஒருவன் ஒரு பொருள் குறித்துத் 'தான் என்ன எண்ணுகின்றுன்' என்பது பிற சூழல்களில் வரவேற்கப் படலாம். சிறப்பிற்குரியதாய் இருக்கலாம் அல்லது அவனுடைய அறிவுத் திறத்தை வெளிப்படுத்த வல்லதாய் அமையலாம். ஆனுல் ஒரு நூலைப் படிக்கும் பொழுது, நூலாசிரியன் எடுத்துக்கூறும் பொருள் பற்றித் 'தான் ஒருவகையாக எண்ணுவதும், அவன் கூறும் பொருள் பற்றித் தனக்குள்ள கருத்து வேறுபாடும் அரைகுறையானதாய், ஆழ்ந்து ஆய்ந்து எண்ணிப் பார்க்கப் படாததாய் அமையலாம். (Your thoughts on any subject are not perhaps the clearest and wisest that could be arrived at thereupon).

தனி மாந்தன் தனக்குரிய, தனக்கு மட்டிமே சொந்தமான பொருள் பற்றியோ, நிலை பற்றியோ கருத்து வேறுபாடு கொண்டிருக்கலாம். ஒருவன் தனக்குரிய உணவு வகைகள், உண்ணும் முறை, உடை, உறையுள் இவற்றைத் தேர்ந்தெடுத்து அமைத்துக் கொள்வதில் மாறுபடலாம்; அவற்றைப் பேணுவதில் பிறர்க்கு மாறு பட்ட கருத்துடையவராய் இருக்கலாம். ஆனால் குமுகாயக் கூட்டு வாழ்வில், மக்கள் எல்லோருக்கும் உரிய பொது உண்மைகளில், தனி மாந்தன் தனக்கென ஒரு கருத்துக் கொண்டிருப்பதும், அதைப் பொது வாழ்வில் திணிக்க முயல்வதும் அறிவுடைமையாகாது.

'புறங்கூறுதல், பொய் சொல்லுதல், பிறர் பொருள் கவருதல்'— இவை தவறுகள்; களையப் படவேண்டியவை. இவ்வுண்மைகளைப் பொறுத்த மட்டில் தனி மாந்தன் தனக்கென ஒரு கருத்துக் கொண்டிருக்க முடியாது. சூழல் கரணியமாகவும், பிறர் நலனை முன்னிட்டும் ஒருவன் பொய் கூறலாம். இருப்பினும் அது தவறு தான். ஆனால் அத்தவறு மன்னிக்கப்படலாம். அதன் பொருட்டுப் 'பொய்' கூறுவது தவறு அன்று; சரியே' என்று எவரும் கூறிவிட முடியாது. விலக்காக இருக்கக் கூடிய சிலவற்றைக் கொண்டு பொது நெறியையே—பொது உண்மையையே மாற்றி அமைக்க முடியாது; அமைக்கக் கூடாது! எல்லோருக்கும் பொதுவான உண்மைகளில் தனி மாந்தன் தனக்கென ஒரு கருத்து கொண்டிருக்கக் கூடாது (**He is bound to have but one opinion**).

இதைக் கருத்தில் கொண்டுதான் நூலை அணுக வேண்டும். ஒரு நூலில், நூலாசிரியன் வாயிலாகச் சுட்டப் பெறுகின்ற சில பொது உண்மைகளைப் பற்றிப் படிப்பவன் தனக்கென ஒரு கருத்து கொண்டிருப்பதும், அவ்வுண்மைகளைத் தன் கோணத்திலிருந்து ஆராய்ச்சி செய்வதும் அறிவுடைமையாகாது.

II ஒரு நூலைப் பயிலும் போது அதில் உள்ள வெறுங் கருத்துகளை மட்டும் அறிந்து கொண்டால் போதாது. அதற்கும் மேலாக, நூலாசிரியனின் உள்ளத்தையும் ஊடுருவிக் காணவேண்டும். நூலாசிரியன் தான் கூறவரும் கருத்துகளோடு தன் உள்ளத்து நுண்ணுணர்ச்சிகளையும் குழைத்து வைத்துள்ளான். எனவே தான் கருத்துகளைத் தெரிந்து கொள்வதோடு, அவற்றோடு குழைத்து வைக்கப் பெற்றுள்ள நூலாசிரியனின் உள்ளத்து நுண்ணுணர்ச்சி களையும் ஊடுருவிக் காண வேண்டியது படிப்போரின் இன்றியமை யாக் கடமையாகின்றது.

மாந்தனாய்ப் பிறந்த ஒவ்வொருவனுக்கும் நுண்ணுணர்ச்சி இன்றியமையாது இருத்தல் வேண்டும். நுண்ணுணர்ச்சி அல்லாதவன் மாந்தன் என அழைக்கப்பட மாட்டான். (**We are only human beings so far as we are sensitive**) மாந்தர்களுள் ஒருவனுக் கொருவன் உள்ள வேறுபாடும், சிறப்பும் ஒருவன் மற்றொருவனைவிட

எந்த அளவிற்குக் கூர்மையான, நுண்மையான உணர்ச்சிகளைப் பெற்றுள்ளான் என்பதைப் பொறுத்தே அமைகின்றன.

இழிந்த உள்ளம் படைத்தவர்களும், தீயவர்களும் புத்தக உலகில் நுழைந்து, அங்கே உயர்ந்த உள்ளம் படைத்த நூலாசிரியனின் நல்லுணர்வுகளையும் நுண்ணுணர்வுகளையும் பகிர்ந்து கொள்ள முடிவதில்லை.

'இழிந்தவர்கள், தீயவர்கள்' என்று இகழப் படுவோரெல்லாம் நுண்ணுணர்ச்சி அல்லாதவர்களே!

இவ்வுலகின் எல்லா வகையான தீங்குகட்கும், இழிவுகட்கும் அடிப்படை நுண்ணுணர்வு இன்மையே (**Briefly, the essence of all vulgariey lies in want of sensation**)

நுண்ணுணர்வு இல்லாதவனுடைய உடலும் உள்ளமும் உணர்ச்சியற்ற வெற்றுப் பிண்டங்களாய்க் கிடக்கின்றன. அவனுடைய மனச்சான்று இறுகிக் கடின முற்றுக் காய்ப்பேறிக் கிடக்கின்றது. தொற்று நோய் போன்ற பல கொடிய பழக்கங்கள் அவனுடைய உடலையும் உள்ளத்தையும் இறுகத் தழுவிக் கொள்கின்றன. அதனால் அவன் பல தீமைகளைச் செய்து தீயவனாகின்றான்.

மாந்தன் ஒவ்வொருவனுக்கும் முழுமையான, நுண்மையான, ஆழமான உணர்ச்சிகள் வேண்டும். ஒருவனை எப்பொழுதும் விழிப்புக்குள்ளாக்கி, வாழ்வினை விளங்கச் செய்து, அவனை வழி நடத்தி நெறிப்படுத்திச் செல்பவையே அவ்வுணர்ச்சிகள்தாம்!

நம் உள்ளங்களில் எப்பொழுதும் எவையேனும் சில உணர்ச்சிகள் தோன்றிய வண்ணமாகத்தான் இருக்கும்! அதிலும், வெற்றுணர்ச்சிகள் சிலவேளைகளில் எம்பிப்பாயும்! ஆனால் உண்மை உணர்ச்சி என்பது இதுவன்று. உண்மை தழுவிய, ஒழுங்குக்குட்பட்ட, பண்பட்ட உணர்ச்சியே உண்மை உணர்ச்சி எனப்படும் (**The true passion is disciplined and tested passion**). அவ்வாறே, ஒழுங்கு படுத்தப்பட்ட, ஒரு முறைக்குப் பன்முறையாக நுணுகி ஆய்ந்து முடிவில் கிடைக்கப்பெற்ற அறிவே உண்மை அறிவு எனப்படும்.

தாறுமாறான உணர்வுகள் கேடானவை; தீமை பயப்பவை. ஒழுங்கு படுத்தப்பட்ட, பண்பட்ட, உண்மை தழுவிய உணர்ச்சிகளே மாந்தனுக்கு வேண்டியவை.

குறுகிய பற்று, தன்னலம் முதலிய உணர்வுகள் வெறுத் தொதுக்கப்பட வேண்டியவை.

இக்கால் கல்வியைவிட, பண்பட்ட ஒழுங்குக்குட்பட்ட, உண்மை தழுவிய நல்லுணர்ச்சியே ஒவ்வொரு மாந்தனுக்கும் தேவை!

மக்களின் நல்லுணர்வின்மேல் எழுதப்படாத எந்த ஒரு நாடும் நிலைத்து நிற்க முடியாது. பணம் குவிப்பதையே குறியாகக் கொண்டு

பணத்திற்காக அங்காந்து திரியும் மக்களை மட்டுமே கொண்டு எந்த ஒரு நாடும் நீடித்து நிலை பெற முடியாது (A nation cannot last as a money-making mob).

இலக்கியம், அறிவியல், கலை, இயற்கைவளம், அன்பு, ஈவு, இரக்கம் போன்ற மாந்த நேயப்பண்புகள் இவற்றையெல்லாம் புறக்கணித்துவிட்டு வெள்ளிப் பணத்தைக் குவிப்பதினால் மட்டும் ஒரு நாடு வாழ்ந்துவிட முடியாது.

'வாழ்க்கை' என்றால் என்னவென்றே விளங்கிக் கொள்ளாதவர்கள் வாழ்வில் முன்னேறத் துடிப்பது எவ்வளவு பெரிய முட்டாள் தனம்!

அதனினும், வாழ்வின் புறத்தேவைகளைப் பெருக்கிக் கொள்வதும், செல்வத்தைக் குவித்துக் கொள்வதுமே வாழ்வின் உண்மையான மேம்பாடு என்று மயங்குவது எத்தகைய மடமை!

எவன் ஒருவன் பண்பட்ட உள்ளமும், நுண்மையான உணர்வும், தெளிந்த அறிவும், பெற்று, உள்ளத்தின் அடிப்படைத் தகுதிகளை மலர்த்தி மணம் கமழச் செய்கின்றானோ அவனே வாழ்வில் உண்மையாக மேம்பட்டவன் ஆவான் (He only is advancing in life, whose heart is getting softer, whose spirit is entering into 'Living peace', whose blood warmer, whose brain quicker).

ஒருநாடு, மக்களைக் கொன்று குவித்துப் பிணக் குவியலாக்கும் போர்களில் பெருஞ்செல்வத்தைக் கொட்டி வீணாக்குவதினும், பல்லாயிரக்கணக்கான நூலகங்களைத் திறந்து, மக்களுக்கு எழுத்தறிவை அளித்து அதன் மூலம் அவர்கள் எல்லோரும் வாழ்வில் உண்மையான மேம்பாடு அடைவதற்குத் துணைபுரிய வேண்டும். அவ்வாறு செய்வதே ஒரு நாட்டின் நாகரிக முதிர்ச்சிக்கும், உண்மையான வளர்ச்சிக்கும் சிறந்த சான்றாகும்.

"தென்மொழி" சென்னை-5.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்:	12 உருபா	24 உருபா	24 உருபா
அரையாண்டுக் கட்டணம்:	6 ,,	12 ,,	12 ,,
தனியிதழ்:	1 ,,	2 ,,	2 ,,

ஓரிதழுக்கு உருபா 2 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!

திராவிட-ஆப்பிரிக்கர்-1

—பர். க. ப. அறவாணன்.

இற்றைத் திராவிடத் தமிழர் தம் தொன்மைப் பிறப்பிடம் இன்னும் புதிராகவே இருக்கிறது. இப்புதிரைக் குமரிக்கண்டம் பற்றிய ஆய்வு விடுவித்தல் கூடும். 'சிந்து வெளி, திராவிடர்தம் தொல்லிடன்; ஆரியர் சிந்துவெளிக்கு வந்து உறழ்ந்தனர். உறழவே, அங்கிருந்த திராவிடர் தென்புலத்திற்கு ஓடி உறைந்தனர்' என்று பலராலும் பலபடப் பேசப்படும் கருத்து முடிவான தன்று. சிந்து—திராவிடர் உறைவிடம் என்பதும், திராவிடரும் ஆரியரும் அங்கே பொருதினர் என்பதும் உண்மைகள் ஆகலாம். ஆனால், இன்று திராவிடத் தென்னிந்திய வாழ் மக்கள் அனைவரும் சிந்துவெளியி னின்றுதான் வந்தனர் என்பது ஏற்பிற்குரியதன்று.

திராவிட இலக்கியங்களில் மிகத் தொன்மையான இலக்கியங் களைப் பெற்றிருக்கும் தமிழில், தமிழர் வடபுலத்தினின்று தென்புலம் போந்ததற்கு ஒரு சான்றும் கிடைக்கவில்லை. மாறாக, தெற்கே இருந்த குமரி நாடு அழிந்த பிறகு வடக்கே தமிழர் நகர்ந்ததாக, இலக்கியங்களும், உரைகளும் வெளிப்படையாகப் பேசுகின்றன. பாண்டிய மன்னன் தென்புல இழப்பை வடபுல மீட்பு மூலம் ஈடு செய்து கொண்டதாகச் சிலப்பதிகாரம் நவிலுகிறது.

'பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
தென்திசை ஆண்ட தென்னவன் வாழி'

என்பது சிலப்பதிகாரக் கூற்று.

கங்கை, யமுனை ஆறுகளைப் பண்டைத் தமிழிலக்கியங்கள் சுட்டுகின்றன. பெரிதாகப் பேசப்பெறும் சிந்து ஆற்றைப் பற்றியோ, அவ்வாற்றங்கரை நாகரிகம் பற்றியோ தமிழிலக்கியங்களில் குறிப் பில்லை. பாடலி, அயோத்தி நகரங்கள் தமிழில் குறிப்பிடப் படுகின்றன. அழிந்த சிந்துவெளி நகர் பற்றி மூச்சே இல்லை.

திராவிடர் இந்தியாவிற்கு வெளியேயிருந்து, வடமேற்கு இந்திய எல்லை வழியாக, இந்தியா வந்து, சிந்துவெளியில் தங்கி நாகரிகத்தை உண்டாக்கினர் என்றும், ஆரியர் வரவிற்கும் பிறகு, தெற்கே நகர்ந் தனர் என்றும், அவர் வடமேற்கே தங்கி இருந்தனர் என்பதற்குச் சான்றே பலுசித்தானில் வழங்கும் பிராகுவி மொழியென்றும் எழுதப் படுகின்றன; பேசப்படுகின்றன. திராவிடரும், ஆரியரைப் போல ஆனால் அவருக்கு முன்பு, இந்தியாவில் குடியேறிய மக்கள் என்பது அன்னோர் கருத்து.

பன்னெடுங்காலப் பழமையும், தலைமுறை தலைமுறையாக செழித்த இலக்கியம் பெற்றிருக்கும் தமிழ் மொழி இலக்கியங்களில், தமிழர் வட புலத்தார் என்று குறிப்பில்லாமை போல, அயல் புலத்தார் எனும் குறிப்பும், குறிப்பாகக்கூட இல்லாமை எண்ணத்தக்கது.

சிந்துவெளி அல்லது அயற்புலம், தமிழர் தம் தாயகமாக இருப்பின், அந்நாடுகளில் மட்டுமே விளையும் கோதுமை போன்ற இன்றியமையா உணவுப் பொருள்கள் பற்றிய பேச்சு, தமிழ்ப்பாக்களில் இடம் பெற்றிருக்கும். அரிசியையும், தினை போன்ற இன்ன பிறவற்றையும் குறிப்பிடும் கழக இலக்கியங்கள், மருந்திற்குக் கூட வடபுலத்திற்கே உரிய குளிர் பயிர்களைக் குறிக்கவில்லை. வடபுலப் பாலை விலங்காகிய ஒட்டகம் பற்றி மிகமிக அருகிய குறிப்பே பண்டை இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளது. யானையும், எருமையும் இன்ன பிறவும் சுட்டப்படும் அளவிற்கு, ஒட்டகம் சுட்டப்படவில்லை. எனவே செடிகொடி விலங்கினக் குறிப்புகளும், தமிழர்தம் பண்டையிடன், சிந்துவெளி என்றோ அதற்கு வெளியே உள்ள இடன் என்றோ உய்த்துரை இடம் தரவில்லை. மாறாக, அவர்தம் முன்னை இடன் தமிழகமே, அல்லது இலங்கை உள்ளிட்ட குமரி நாடே என்பதற்கு அக்குறிப்புகள் துணையாக நிற்கின்றன. சிங்கம் திராவிட விலங்கன்று. அரிமா என்பது சிங்கத்திற்குத் தமிழர் இட்ட பெயர். 'அரிதான விலங்கு' என்று அதற்குப் பொருள். எனவே, சிங்கச் சின்னத்தை முதன்மையாகக் கொண்டு வாழும், சிங்களவர் ஈழத்திற்கு உரிய மாந்தர் அல்லர் என்பது அவர்தம் பெயராலேயே புலப்பட்டு நிற்கிறது. ஈழத்திற்கு உரிய உரிமை மாந்தர் தமிழரே.*

'அமிழ்' என்ற வினையடியாகவே தமிழ், தமிழர், ஈழம் என்ற சொற்கள் தோன்றியிருத்தல் கூடும். அடுத்தடுத்த கடல் கோள்களால் தமிழர் அல்லலுற்றனர்; கடலில் மூழ்கினர்; மீண்டனர். கடலுள் அமிழ்ந்து அமிழ்ந்து மீண்டும் தப்பி வாழும் இனத்தை **'அமிழ்ந்தோர்'** என்று முன்னையோர் குறித்திருத்தல் கூடும்.

த் + அமிழ் = தமிழ் த் + அமிழ் + அர் = தமிழர்

தமிழர் என்ற சொல்லே திரிபுற்று, த் + அம் + **இழ் + அர்;** இழ் + வ் + அர் > இழவர் > ஈழவர் > ஈழம் > என்று வடிவம் எய்தியிருத்தல் கூடும்.

திருநெல்வேலி, கன்னியாகுமரி, கேரளம் (தெற்கு) ஆகிய பகுதிகளில் கடலோர மக்கள் **'முக்குவர்'** என்று அழைக்கப்படுகின்றனர். அமிழ்ந்தோர் > அமிழர் > தமிழர் என்பது போல 'முக்குவர்' என்பதும் காரணப் பெயராகும் முக்குதல் என்றால்- மூழ்குதல் என்று பொருள், கடலில் (முத்துக்காக) மூழ்குவோரை அல்லது மூழ்கிக் கரைசேர்ந்தோரை முன்னோர் **முக்குவர்** என்றனர்

* பெர்சியன் வளைகுடா, டைக்கிரிசு ஆற்றிற்கு வடகரையில் புகழ்பட வாழ்ந்த ஏலாம் (Elam) என்ற மக்கள் ஈழத்திலிருந்து குடியேறினர். அவர் பேசும் மொழியும், பிராகுவி—என்ற திராவிட மொழியும் மிகப்பல ஒற்றுமையைப் பெற்றிருக்கின்றன. கேரளத்தில் 'ஈழவர்' என்ற பெயரில் மரமேறிகள் அழைக்கப் படுகின்றனர். மாந்தவியல் அறிஞரும், முன்னுள் சென்னை அரும் பொருட்காட்சி இயக்குநரும் ஆன திரு. அய்யப்பன் ஓர் ஈழவர் ஆவார்.

போலும். கடலில் மீன் பிடிப்போர், இங்கே **'பரதவர்'** எனப் பெறுகின்றனர். இப்போது முக்குவரும் மீன்பிடி தொழில் நடத்துகின்றனர்.

அமிழ்தல் என்ற வினையடியாக ஓர் இனப்பெயர் வழங்குமா என்பதற்கு **முக்குவர்** என்ற பெயர், ஐயம் அகற்றும் சான்றாக நின்றிலங்குகிறது.

தமிழ் நாட்டுத் தமிழரும், ஈழத்துத் தமிழரும், தமிழக எல்லையோரத் திராவிடத் தெலுங்கரும், [1]தமிழ் மொழியுடன் நெருக்க உறவுடைய மலையாளியரும் இன்ன சில பழங்குடியினரும், தென்புலத்திற்கே உரிய மக்கள். அங்ஙனம் எனில், வடபுலத்தில் ஆரியர் வருகைக்கு முன்பு இருந்தோர் யார்? **ஐயத்திற்கிடமின்றித் திராவிடரே**. ஆப்பரிக்கரை ஒத்த கறுப்பு நிற மக்கள் வாழ்ந்தனர். அவர்தம் மொழி முன்னைத் திராவிடமாக இருந்தது.

குசராத் மாநிலத்தில் உள்ள இலான்கனுஞ்ச்சு (Langhnaj) என்ற இடத்தில் கிடைத்துள்ள பழங்கால மாந்த எலும்புக் கூடுகள் ஏழு 'நீக்ரோ' வினுடையவை என்று அறியப் பெற்றுள்ளன. இவை மிகத் தொன்மையான 'மைக்ரோ லித்திக்' (Micro Lithic) பண்பாட்டுக் காலத்தன.

வரலாற்றுத் தந்தை எனப் புகழப்பெறும் எரோடொட்டசு (Herodotus) என்ற கிரேக்கர் (கி.மு. 425-484(?), குசராத்(பண்டை அகன்ற திராவிடத்தின் வடமேற்கு) எல்லையில் சுருண்ட முடியும், கறுப்பு நிறமும் பெற்றிருந்த தென்னிந்திய மக்களைப் பார்த்ததாகக் குறித்துள்ளார். இக்குறிப்பு நீக்ரோவிற்கு முற்றும் பொருந்துவது என்பர் அறிஞர்.

கி.பி. 320-750 காலத்தினரான அசந்தா ஓவியக் கூடத்திலும் குப்தர் காலச் சிற்பங்களிலும் நீக்ரோ மக்கள் போன்ற வரைவுகள் கிடைத்துள்ளன.[2]

தென்னிந்தியப் பழங்குடிகளான காடர், இருளர், பணியர், உராலி ஆகியோர்தம் நிறம், தலைமுடி, முக அமைப்பு இன்ன பிற தோற்ற அமைவுகள் (Physical features) நீக்ரோவரை ஒத்தன. இருளர் என்ற பெயரே இருள் போன்ற கறுப்பு நிறத்தினர் என்று உணர்த்தி நிற்கிறது.

இலாபிக் (Lapique) என்ற மாந்த இயலார், தமிழக வெள்ளாளர், பறையர், செருமார் ஆகியோர் தம் உருத்தோற்றத்தை ஆராய்ந்து, அன்னோர் நீக்ரோச் சார்பினர் என்ற முடிவிற்கு வந்தார். ஆனால் பின்னர் இவர் தம் கருத்தை மாற்றிக் கொண்டார் என்பர்*

---

1. தெலுங்க நாட்டுப்புற மக்களிடம், கடல்கோள் பற்றிய பழங்கதைகள் வழங்குகின்றன.
2. **Majumdar. D.N. and Madan. An Introduction to Social Anthropology. 1970. p. 260.**

காடர் (கொச்சி), முகத்தோற்றம் அப்படியே நீக்ரோவரை நினைவுறுத்துவது. பணியர் (தமிழ்நாடு, கேரளா) தோற்றமும் அவர் தம் குருதிக்குழு (**Blood group**)வும், அவர் நீக்ரோவர் என்று காட்டுகின்றன. காடர், தம் முன் பல்லை உடைத்துக் கொள்ளும் குழுப் பழக்கத்தினர். கேரள மாநிலப் பிறிதொரு பழங்குடி மக்களான மலைவேடரிடமும் இப்பழக்கம் உள்ளது. இது கிழக்கு ஆப்பிரிக்க மக்களிடமும் உள்ள பழக்கமாகும். மூங்கிலால் செய்யப் பெற்ற சீப்பைத் தலையில் அணிந்து கொள்ளும் ஆப்பிரிக்கப் பழக்கம், காடரிடம் அப்படியே உள்ளது.

தென்னிந்தியப் பழங்குடிகளான உராலி, கணிக்கர், முதுவர், உள்ளாடன், அந்தமானில் வாழும் ஓங்கே ஆகிய பழங்குடிகளிடம் தனித்த ஓர் அமைப்பு கொண்ட வில் புழக்கத்தில் உள்ளது. இந்த வில் நீக்ரோ மக்கள் தம் கண்டு பிடிப்பாகும். இவ்வில்முறை இப் பழங்குடிகளிடமும், ஆப்பிரிக்க குடிகளிடமும் மட்டுமே இருந்து வருகிறது.

தென்னிந்தியாவில் கருநிறத்தராகவும், தாழ்த்தப்பட்ட மக்களாகவும், வாழும் **ஆதிதிராவிடர்**, பறையர் என்று அழைக்கப் படுவர். கிழக்கு ஆப்பிரிக்காவிலும், எதியோப்பியாவிலும் பறைய(ர்) (**Pariah**) என்ற குடிமக்கள் உள்ளனர். அன்னோர் வேட்டுவராகவும், துடைப்பராகவும் (**Sweepers**), அறுவை மருத்துவரா (**Surgeons**) கவும் (வெட்டியான் ?) வாழ்கின்றனர். சோமாலி நாட்டில் தோல் தொழிலாளர் **பறைய(ர்)** என்று குறிக்கப்படுகின்றனர்.[1] தமிழ கத்தில் பறையர், ஆதி திராவிடராகக் குறிக்கப் பெறுவதும், அறிஞர் இலாபிக் பறையரை நீக்ரோ இனத்தார் என்று கூறினதும் இணைத்து நினைக்கத்தக்கன.

அரசமர வழிபாடு, நிலச்செழிப்பு, இறந்தோர் ஆன்மா தொடர் பான நம்பிக்கைகள் நீக்ரோ மக்களால் இந்தியாவில் பரவின என்பர் அறிஞர் அட்டன் (**Hutton**).[2]

தமிழ்ப் பொதுமக்களிடையே, கறுப்பண்ணசாமி, கறுப்பாயி என்ற சிறு தெய்வங்கள் வணங்கப்படுகின்றன. கேரள மாநிலத்தில் உள்ள முல்லைக் குறும்பர்தம் தெய்வம் **கரியப்பன்** எனப்பெறும். வயநாட்டில் வாழும் காடர், **'கரியத்தன்'** என்ற தெய்வத்தை வழிபடுகின்றனர். காளியம்மன் வழிபாடு, தமிழகத்திலும் வங்காளத் திலும் புகழ் பெற்ற ஒன்று. பெரும்பாலும் ஒவ்வொரு சிற்றூரிலும் அம்மன் வழிபாடு உள்ளது. காளி என்பதன் பொருள் கறுப்பு

---

*. Krishna Iyer. L. A. and Balaratnam. L. K. Antropology in India. p. 60.

1. Seligman. Races of Africa. p. 79.
2. Quoted by Majumdar and Madau. An Introduction to Social Anthropology p, 260.

என்பதும், அம்மனின் நிறம் சிவனைப் போலச் சிவப்பு அன்று என்பதும் கருதத்தக்கன. அனுமன் வழிபாடு திராவிட வழிபாடு ஆகும். அனுமன் என்ற சொல் வடசொல் அன்று. ஆண்மந்தி என்ற இரண்டு தமிழ்ச் சொற்களின் கூட்டு **'அனுமன்'** என்று ஆயிற்று.[1] அனுமன் தென்புலக் கிட்கிந்தையில் இருந்தவன் என்பதும், இன்னபிறவும் அவன் திராவிடன் எனக்காட்டும். தாடை நீண்ட, உயர்ந்த அனுமனது தோற்றம், வலிமை ஆகியன அப்படியே ஆப்பிரிக்க நீக்கிரோ இயல்புகளை எதிரொலிப்பன.

தமிழர் மா நிறத்தர் (மா = கறுமை) எனப் பண்டைய இலக்கியங்களில் வருணிக்கப்படுதலும், 'கறுப்பின்கார் அழகு' என்ற பழமொழி அவரிடையே நெடுங்காலந் தொட்டு வழங்கி வருதலும் கருதத்தக்கன. தமிழிலக்கியங்களில் கட்டப்படும் குமரி (நாடு) என்ற பெயர், மடகாசுகருக்கும் ஆப்பிரிக்காவிற்கும் இடைப்பட்ட தீவை இன்றும் குறிப்பதும், மடகாசுகரே குமரி என்று சொல்லப் படுவதும், கடல்கோள் பற்றிய கதை, நம்பிக்கை ஆப்பிரிக்க மக்களிடம் இருப்பதும் எண்ணத்தக்கன.

இவையன்றித் திராவிட, ஆப்பிரிக்க மொழிகளுக்கு ஊடே பல ஒற்றுமைகள் கண்டறியப்பட்டு வருகின்றன. குறிப்பாக, இரண்டு மொழிக் குடும்பமும் ஒட்டு நிலை மொழிகளை உடையன. விரிவாக அறிய விரும்புவோர், 'செந்தமிழ் செனகால் செங்கோர்.' **Dravidians and Africans**-என்ற என் இரு நூல்களையும் பார்க்க.

திராவிட மொழிகளாக, ஐயத்திற்கிடமின்றி நிறுவப்பட்டுள்ள கோண்டி, கோயா, கோண்டா, குவி, கி(Kui), கோலாமி, நாய்கி, பர்சி (Parji), குடு (Kudux), மால்டோ, பிராகுவி ஆகிய மொழிகள், வடஇந்தியாவில் வாழும் பழங்குடி மக்களால் இன்றும் பேசப்பட்டு வருகின்றன. இப்பழங்குடி மக்கள் குசராத், மகாராட்டிரம், மத்தியப் பிரதேசம், ஒரிசா (பலுசித்தான்) மாநிலங்களில் வாழ்ந்து வருகின்றனர். இந்தி மொழியும், வங்காள மொழியும், திராவிட மொழிகளால் தாக்கப் பெற்றவை. வடமேற்கே, ஆப்கானித்தான், பாகித்தான் எல்லையில் உள்ள பிராகுவி மொழியும், நேபாள நாட்டில் பேசப்பெறும் மொழியும் திராவிட மொழிகள். உத்திரப் பிரதேசம் எனப்படும் வடநாடு, தன் கொடியில் பாண்டி மன்னர்க்குரிய மீன் இலச்சினையைக் கொண்டு விளங்குகிறது.

குசராத், மகாராட்டிரம், நடுவண் பைதிரம் இராசத்தான் மாநிலங்களில், வாழும் பில் (Bhils) என்ற பழங்குடி மக்கள் கறுப்பு நிறத் தோற்றத்தினர். வில்லாற்றலில் மிக வல்லவர். வில்லவர் என்பதே பில்(லவர்) என்று குறிக்கப்படுகிறது; வங்காளம் > பங்காளம் என்பது போல. சேரர் வில் கொடியினர் என்பதும், அவர் வில்லவர் எனக்குறிக்கப்படுவதும் எண்ணத்தக்கன. பில் பழங்குடி

1. **S. K. Chattarji-Anmandi-T. P. Meenakshi sundaram 60th birth day volume Kalaikathir Publication.**

மக்கள் ஒரு காலத்துத் திராவிட மொழி பேசுநராக இருந்தனர் என்றும், பிற்காலத்தில் சுற்றுச் சூழலின் தாக்கத்தால், தம் மொழியை மறந்து ஆரிய மொழி பேசுநராக மாறினர் என்றும் அறிஞர் கருது கின்றனர்.* அவர்தம் கறுப்பு நிறம், திருமண முறை, (Cross-cousin marriage), சாவுப்பறை முதலான சாவுச் சடங்குகள், பெண்ணிற்குத் தரப்படும் மதிப்பு, முலைக்கூலி கொடுத்தல் முதலாய அவர்தம் வழக்கங்கள், பில் மக்கள் திராவிடர் என்று சாற்றுகின்றன.

கோண்ட் (**Gond**) திராவிட மொழி பேசும், முரியாப் பழங் குடியினர் நடுவண் பைதிரம், ஒரிசா மாநிலங்களில் வாழ்கின்றனர். நடு இந்தியா முழுதையும் ஒரு காலத்தில் ஆண்ட, பெருமைக்குரியர் திராவிட மக்கள். அன்னோர் தெற்கே, குமரி நாட்டினின்று வந்தோர் என்று ஒரு கருத்துண்டு. இக்காரணம் பற்றியே, அழிந்த குமரிக் கண்டம் **கோண்ட்வன நிலம்** (**Gondwana Land**) என்று அழைக்கப்பட்டது. மூர்-என்றால் வேர் அல்லது மரம் என்றும்; மிகப்பழங்குடி என்றும் பொருள். பாண்டியர் எனும் பெயர், பழைமை எனும் பொருளினதான 'பண்டு' என்ற சொல்லடியாகப் பிறந்தது என்பதும், மிகப்பழங்குடியினர் என்ற பொருளினதான 'முரியா' என்ற பெயரும் இணைத்து எண்ணத்தக்கன.

பண்டைத் தமிழரை ஒத்த பல பழக்கங்கள், இவரிடம் உள்ளன. கழக இலக்கியம் காட்டும், உடன் போக்கு மணமுறை, பெண்ணை மலராக நினைத்தல் (பூப்பு, மணம், பிள்ளைக்கனி), காளையை அடக்கிப் பெண்ணை மணப்பது போல, முரியா இளைஞர் ஒரு கட்டுக் குச்சியை ஒடித்துக் காட்டல், கணவன் மடிந்தால், துணைவி (கண்ணகியைப் போலக்) கைவளையல்களை உடைத்தல், 'மென்கிர்' என்ற நடுகல் நாட்டல் போன்ற பல பழக்கங்கள் இவரிடம் வழங்குகின்றன.

தாய்மைக்குத் தலைமை இடம் தரும் மரபு, திராவிட இயல்பு. கேரளம், குமரிமாவட்டம், தென் கருநாடகம் ஆகிய பகுதிகளில் மிகப் பரவலாக இருந்த **மருமக்கள் தாயமுறை** திராவிடக் குமுகாயத்தில் தாய்மைக்கிருந்த தலைமையைக் காட்டும். 'தாயம், தாயமுறை' என்ற சொற்களே, பெண்மையின் முதன்மையை நுவலும். வட இந்தியாவில் பழங்குடிகள் சிலரிடம் இருக்கும் தாய் வழி முறை அவர்தம் பண்டைய திராவிட இயல்பின் எச்சமாகும்.

பெகிகா (**Bhehikas**), நேவார் (**Newars**), அரத்தர் (**Aratas**) ஆகியோரிடம் தாய்க்கே தலைமை உரிமை இன்றும் உள்ளது. அசாம் மாநிலத்தில் வாழும், காரோ (**Garos**), காசி (**Khasis**) பழங்குடி மக்களிடமும் இம்முறை உள்ளது.

தாய்வழி முறை-ஆப்பிரிக்கரிடம் பரவலாக உள்ள முறையாகும். இஃது அன்னோரிடம் உள்ள திராவிட இயல்பைக் காட்டுவதாகும். o

* Krishna Iyer. L. A. and Balaratnam L. K. Antropology in India p. 54.

மேலுஞ் செல்வந் தொகுத்து வளனுறு வாழ்க்கை செலுத்தவும், அரசாளுவோரின் சாய்காலைப் பெற்று, அனைத்துமறிந்தோராக விளம்பரம் பெறவும் இங்குள்ள ஏமாளித் தமிழர்களை ஏணிப்படிகளாக்கிக் கொள்கின்றனர் என்பதைத் தங்களது தங்குதடையற்ற ஆசிரியவுரையான் ஐயந்திரிபற அறிந்தேன். நூறுபேர் கூடி ஊர்வலம் நடாத்திப் பூமாலையும், மேடையும் அமைத்து 'வாழ்க, வாழ்க' என வாழ்த்துப்பா பாடினால் அசடன் அறிஞனாய் மாறுவான்; குழப்பஞ் செய்பவன் முழக்கஞ் செய்தவனாவான். மந்தையாடுகள் நம் அருந்தமிழ் மக்கள், பொருள் புரியாத போலிக் கருத்துகளானாலும் உண்மைக்குப் புறம்பான வரம்பு கடந்த முடிவுகளானாலும் கை தட்டி வரவேற்பார்கள். அரிய கருத்துகளைச் சொன்னாலும், கைசலிக்க எழுதினாலும் அவற்றைப் புறக்கணித்துவிட்டுப் பொழில்வாய்ச்சியாரைப் போலுஞ் செல்வர்கள் தஞ் செல்வப் பெருக்கால் வறுமொழி கூறி புரளிகளைப் பரப்பினாலும் பட்டந்தாங்கியவர் முதல் படியாதார் முடிய அனைவரும் அணிதிரண்டெழுந்து தலைமேல் தூக்கி வைத்துக் கொண்டாடுவார்கள். இரங்கத்தக்க இழிநிலை!

கோவைப் பேராசிரியரொருவர் 'எப்படியுந் தமிழ் வளர்க்கலாம்' எனக் கூறிக் கொண்டு, தமிழாலுயர்ந்த தெ. பொ. மீ., அ.ச.ஞா., கொ.சு.ம. முதலானோரின் பரந்துபட்ட (!) பகுத்தறிவுக்குப் பிணை பேற்று எழுதியிருந்த மடல் கண்டேன்; அவர்தம் மடமை என்னே! கற்றோரை நோக்கிக் கருத்தழியும் பண்பும், 'முன்னோர் மொழிப் பொருளேயன்றி அவர் மொழியும் பொன்னே போற் போற்றும்' பெரு நோக்குந் துணிவுமில்லா அப் பேராசிரியர், 'இப்படித்தான் தமிழ் வளர்த்தல் வேண்டும்' என, ஒரு நெறிமுறைபற்றி, நெஞ்சுறுதியுடன் வினையாற்றுந் தங்களைத் தங்களது ஆசிரியவுரையைத் தகாவுரை எனக்கூறி, யாரையோ பொந்திகையுறச் செய்துள்ளார். பிழைக்கத் தெரிந்தவர்! —**பெரு. தமிழ்வேந்தன்**. பவானி சாகர்.

0:642: தனித்தமிழ்த் தலைவ! வணக்கம். சென்ற இதழில் தகாத சொற்கொண்டு தாக்கியிருப்பதாகச் சொல்லும் கோவை இராச மாணிக்கனார் ''மொழியியல் மூதறிஞர் பெரியார்'' என்பதைத் தகுந்த சொல் என்கின்றாரா? தாக்குவதென்பது கருத்தறிவித்தவரையல்லவே. அவர் குறிப்பிடும் ''மதிப்பைக் குறைத்துவிடும் ஆசிரியவுரை'' என்பதும், ''தங்கள் ஒருவர்க்கே தமிழ் மீது பற்று'' என்பன போன்ற சொற்களும் தென்மொழியையும், ஆசிரியரையும் ஓரிரு முன்னிதழ்களை மட்டும் பார்த்து விட்டு எழுதியதாகக் காட்டுகின்றனவேயன்றி, பேராசிரியர் எழுதியதாகத் தெரியவில்லை. சொற்பொருளை மட்டுமன்றி வேர்ப்பொருளையும் எண்ணிப் பேசுபவர் தென்மொழியாசிரியர். பேராசிரியர் கூற்றுப்படி வீடண, பிரகலாத, சுப்பிரமணிய, தெ. பொ.மீ, வையாபுரி, கண்ணதாச, மகாலிங்கங்கள் எல்லாம் தமிழ், மொழி, இன, நாட்டு வளர்ச்சியில் உண்மையிலே அக்கறை உள்ளவர்கள்-ஆரிய அடிமைகளலல்லர் என்கின்றாரா? 'கண்ணின்று கண்ணறச் சொல்லுதலே யன்றி, கனியிருப்பக் காய் கவர்த'லன்று என்பதைப் பேராசிரியர் அறியாதவரா? தங்களின் அறிவையும், நயன்மையையும் தமிழ் காக்கவேண்டிப் பயன்படுத்தும் பகை கொளாக் கடுஞ் சொல்லையும் நடு நின்று, தேர்ந்து, தெளியாத பேராசிரியர், மற்றவர்கள் தங்கள் அறிவிற்கு ''எள் முனை''யுங் குறைந்தவரல்லவர் என்பது எந்த உணர்விலோ? கொண்டலார் கூறுவது எந்த வகையில் தமிழை வளர்க்கும்? உலக மக்கட் டொகையில் நான்கில் ஒரு பகுதியினரான சீனர்கள் தம்மொழி

யிலுள்ள 10ஆயிரம் எழுத்துகளைக் குறைப்பதற்கு மாருக அதற்கான கருவிகளைக் கண்டு பிடிப்பதில் அன்ருே முனைந்து வருகின்றனர்! அதுவல்லவா அறிவியல் வளர்ச்சிக்குப் பயன்தரும்! தட்டச்சுப் பொறிகளை, வளர்ந்து வரும் "ஒலியெழுதி" (DICTA PHONE) போன்ற கருவிகளைக் கண்டு பிடித்துப் புறந்தள்ளி வரும் மேலையரின் அறிவியல் அன்ருே வருங்கால நோக்குடையது! தென்மொழி யாசிரியர் எண்ணத்திலும் எழாத ஒன்று, ஆளைத் 'தாக்கு'வதென்பது. **பெரியார் கூறியது போல. தென்மொழியாசிரியரும் இப்படிச் சொன்னுலாவது அறிவு வராதா என்றுதான் எழுதியிருப்பார் என்று நினைக்கவொண்ணுமல் பேரா சிரியரைத் தடுத்தது எதுவோ?** இடமும், நேரமும் மிகுதியா வதற்கும் "பகுத்தறிவுக் கண்" ணுக்கும் தொடர்பில்லையெனப் பேராசிரியர் எழுதியிருப்பதோடல்லாமல், பெரியாரையும் தம் கூற்றுக்கு உட்படுத்துவது எந்தவகைப் பகுத்தறிவோ!

—தென்மொழி. ப. **முருகவேள்** சென்னை-88

0:643: ஐயா, சென்னையில் திரு. மகாலிங்கம் அவர்களால் கூட்டப்பட்ட தொன்மவியல் கருத்தரங்கினைப் பற்றிய தங்கள் ஆசிரியவுரை என் போன்ருேரை எழுச்சி கொள்ளச் செய்தது. இத் தொன்மவியல் கருத்தரங்கினைப் பற்றி, இதுபோன்ற வெளிப் படையான செய்தியினைத் தென்மொழிக்கு முன்னர் நாங்கள் அறிய இயலவில்லை. வாஞெலியில் இக்கருத்தரங்கின் சுருக்க நிகழ்ச்சியைக் கேட்டோம். முதல் நாள் வரலாற்றுப் பேராசிரியர் உயர்திரு. தங்க வேலனுர் அவர்கள் அளித்த கருத்தினைக் கேட்டோம். அப் பேராசிரியரைத் தொடர்ந்து பின்னிரு நாட்களும் அளித்த விளக்கங் களில் இத்தகைய உள்நோக்கம் உள்ளதா என்பதை நாங்கள் அறிந்து கொள்ள இயலவில்லை. தங்கள் தென்மொழி ஆசிரியவுரையைக் கண்ட பின்னரே திரு. மகாலிங்கம் அவர்களால் தமிழ்மொழிக்கும் தமிழர்க்கும் பின்னப்பட்டுள்ள சூழ்ச்சிவலையை அறிந்து கொண் டோம். ஆரியப்பார்ப்பனர்கள் பகைவனைக் கொண்டே தம் பகைவரை வெட்டி வீழ்த்துவார்கள் என்பதற்கு இத்தொன்மவியல் கருத்தரங்கே தக்க சான்று. அதற்கேற்ற கருவியாகத் தொழில் தலைவர் மகாலிங்கம் அவர்கள் கிடைத்துள்ளார். பண்டைய ஆரியர்களுக்குப்பிரகலாதனும், இராமனுக்கு விடணனும் கிடைத்ததைப் போல, இக்கால் ஆரியர் களுக்கு மகாலிங்கம் போன்ருேர் கிடைத்திருப்பது தமிழன்னை செய்த தவக்குறைவே என்று எண்ணிப் பெரிதும் வருந்தவேண்டி யுள்ளது. இத்தகைய கோடரிகளைத் தமிழக வரலாறு கண்ட ஒன்றே என்று நாம் புறக்கணித்து விடக்கூடாது. அன்புமிக்க ஐயா! பாவலர் வரிசையில் பாவேந்தருக்குப் பின் தமிழரைத் தலை நிமிரச் செய்யும் எழுச்சி மிக்கப் பாக்களைப் பாடவல்ல பாவலரேருகிய தங்களையே நாங்கள் பெரிதும் பெருமையோடும் உரத்தோடும் நம்பி வருகின்ருேம். தாங்கள்தாம் உண்மைத் தமிழ் அறிஞர்களையெல்லாம் ஒருங்கு கூட்டி இத்தகைய புரட்டுகளை அழித்தொழிக்க வேண்டும். இல்லையென்ருல் தடி எடுத்தவன் எல்லாம் தம்பிரான் என்பதைப் போல, பொய்யே மெய்யாக உலவும் நிலை ஏற்பட்டுவிடும்.

– புலவர் **தமிழ் நெஞ்சன்**. க.மு. ஆரணி.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600005 (தமிழகம்).